KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5] 1932 ளு ஜனவரி மீ 21உ [No. 3

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 41
2. தமிழிப்பாடம்
நளவெண்பா — சுயம்வர காண்டம் 43
3. குன்றுடையானும் மக்களும்
W. V. கோவிந்தசாமி ராஜு BA.,LT. 47
4. ஜுலியஸ்ஸீஸர் (அங்கம் 1. களம் 2.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 49
5. அப்பர் (64 கலை—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 51
6. கம்பராமாயணம் (விராதன் வதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 53
7. சூளாமணி (தூதுவிடு சருக்கம்—50-55).
K, இராமரத்நம் ஐயர் B. A. 57
8. வர்த்தமானம். 59

சந்தாத் தொகையை அனுப்பிவைக்காத நண்பர்களுக்கு இன்று முதல் வி. பி. அனுப்பி வருகின்றோம். தம் கைக்கு எட்டியவுடன் அதனைப் பெற்றுக்கொள்ளத் தவறுவாராயின் எமக்கு மிகுந்த நஷ்டமாகும்.

தபால்கட்டணம் உயர்ந்திருப்பதால் மலேயே தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இவ்வாண்டிலிருந்து சந்தா ரூ. 9-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்விடங்களுக்கு வி. பி. அனுப்ப இயல்வதில்லையாதலின் அங்கிருக்கும் நண்பர்கள் விரைவில் தம் சந்தாத் தொகையை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

கலாநிலயம்

இறுமாந் திருப்பன் கொலோ? 2.

"இருக்கின்றேன்" என்பதற்கு ஒரு பொருள் இல்லாமற்போகின்ற இரகசியத்தைச் சென்றவாரம் சிறிது உய்த்துணர முயன்றோம். காலம் என்னும் அத் தத்துவம் நம் கருத்திற் ககப்படாமல், நினைக்க நினைக்கப் பற்றப்பெறாததாய்க் கழன்று தீர்வதே, நிகழ்காலத்தின் பொருள் நிலைக்கவொட்டாமல் மருள் செய்யக் காரணமாகின்றது. காலம் நம்மைக் கடந்து செல்கின்றதென்று உரைக்கவும் இயலவில்லை; மற்று, நாந்தாம் காலத்தைக் கடந்துசெல்கின்றோம் என்று உரைப்பதற்கும் இயலவில்லை. இவ்விரண்டினையும் இதன்முன் விளக்கிவைத்தோம். இதன்படி, இருக்கின்றதென்னும் வாசகத்திற்கு இலக்காகிய ஒரு பொருள் அதே நிமிடத்தில் இல்லாததாகிவிடுகின்ற இந்திரஜாலத்தை ஏற்றுக்கொள்ள நம்மனோர் மனம் எளிதில் ஒவ்வுமென்று எண்ணலாமோ! விலக்கரிய விஞ்சைகளை இப்படியே காலம் இழைத்துக்கொண்டிருந்தாலும், ஒவ்வொரு பொருளும், "காலமே, உன் இந்திரசாலத்தின் திறம் இன்னதென்று யான் கண்டுபிடிக்கக் கற்றிலேன்; எத்தனையோ விதங்களில் நான் உன்கரவை வெளியாக்கமுயன்றாலும் அதற்குமேலும் ஒரு கரவினால் என் கண்களைக்கட்டி உன்னுடைய முடிவிற்கே என்னை ஆளாக்கிக்கொள்கின்றாய்; ஆயினும் நான் இதற்கு முற்றிலும் உடன்பட்டு அடங்கிக் கிடக்கமாட்டேன் காண்; உன்னுடைய குதர்க்கத்தினால், "நான் இல்லை" என்று எத்தனைதான் வற்புறுத்தி வாதித்தாலுமென்! இருக்கின்றநான் எவ்வண்ணம் இல்லாததாகி விடுவேன்; நான் இருக்கின்றேன்! இருக்கின்றேன்!! இருக்கின்றேன்!!! நான் இருக்கின்றவனாதல்தான் வேண்டும்" என்று கையற்ற நிலையிலும் கழறாதொழிகின்றதில்லையே. இவ்வாறு கழறுவதற்குச் சொற்கள்வேண்டா, குரல்வேண்டா. உலக விவகாரங்களத்தனையும் இம்மொழிகளுக்குரிய கருத்தின் பிரதிபிம்பங்களே. ஆயினும், தத்துவங்களால் தாம் தகையப்படுதை உணரவல்ல தாயுமானவர் அனைய தூய்மையோர், "அநியாயமாய்இந்தவுடலைநானென்று வரு மந்தகற் காளாகவோ" என்று வாய்விட்டு மறுகி

யும் உளர். அந்தகன் என்பது இங்குக் காலம். இதனைத்தான் உருவகத்தில் ஆண்பாலாக்கிக் காலன் என வழங்குகின்றோம். மகர னகர இறுதிப்போலி என்றாலும் பிழையில்லை. காலமானது 'நான் நான்' என்று பறைசாற்றியவண்ணமா யிருக்கின்றது. இத னாற்றான், காலம் என்பது இன்னதென்று கணித் தறிய இயலாவிடினும், "எல்லாங் கழிந்து கழிந்து எதுவொன்றிற் சேர்கின்றதோ அதுவே காலம்' என நிச்சயிக்க வேண்டிவருகின்றதென்று சென்றநாள் எடுத்துச்சொன்னோம். தன்னுடைய அச்சத்தை இம் மொழிகளால் தெரிவித்த தாயுமானவர், வேறோர் பாடலில், "அவ்வச்சத்திற்குஆளாகமாட்டேன்" என்ற இச்சையை நிச்சயம்போல், "அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறையெயிற் றுபாச வடிவமான அந்தகா, நீயொரு பகட்டால் பகட்டுவ தடாதடா, காசு நம்பால் செல்லாதடா" என்று வைது மருட்டுகின்ற வன்சொற் களுடே விளம்புகின்றவராகின்றார். வாக்குவாதத்தில் வைகின்றவர் கட்சி வலிவற்றது என்பது எப்பொழு தும் வாதங்கள் புரியுங்கால் விளங்கிவருகின்றது. வெல்லும்வகை வேறு அறியாமையின் தாயுமானவர் காலத்தை அத்துணைக் கடிந்தறைகின்றார். கத்திக்குக் கூர்மை மழுங்கினால் பிடியைக் கொண்டேனும் அடிப் பது போலாம் இது. "காசு நம்பால் செல்லாதடா" என்னுமிம் மரபுவாசகத்தைத் தாயுமானவர் தெருச் சண்டையிடும் கிழோர் வாய்நின்றே வாங்கிக்கொண்டா ரென்றால், அவர் 'ஆத்திரம்' எத்துணை பொங்கியிருத் தல் வேண்டும்! தன்னுடைய கட்சி தளரத்தளர ஓங் குவது சினமாதலின் இந்த வசைச்சொற்கள் இயற் கையாய் வந்தன "இருக்கத்தான் வேண்டும்" என் னும் இச்சையையே நிச்சயமென்று நம்பப்பார்க்கின் றார் இவர்; அது இயலாமையின் எரிந்து விழுகின்றார். இந்நிலையைத் தான், "காலமே, உன் முயற்சியையெல் லாம் வீணாக்குகின்றேன் நான்" என இச்சை அறை கூவிக்கொண்டிருக்கின்றதென முன் இங்குக் குறித் தோம். தோற்கமாட்டேனென்று இவ்வண்ணம் ஒல் லும் வகையெல்லாம் போராடுகின்ற இவ்விச்சையின் தன்மை என்ன வென்று இனிச் சிறிது கருதுவோம்.

"நான் இருக்கின்றேன்" என்ற நினைவை ஒருவன் தன் மனதில் தங்கவைத்து இரண்டொரு நிமிடங்கள் தொடர்ச்சியாகச் சிந்திப்பானாயின் அந் நினைவைச் சூழ்ந்து சிற்சில எண்ணங்கள் எழுதல்வேண்டும். "இதற்குமுன் கணக்கில்பல்கோடி வருடங்கள் நான் இருந்திலன்; இனிவரும் கணக்கில்பல்கோடி வரு டங்கள் நான் இருப்பேனல்லேன்" என்ற எண்ணம் எய்துங்கால்,—என்னிது! முன்னுமின்றிப் பின்னு மின்றித் 'திடீர்' என்று தான் இருக்கின்றவனா யதைக் காண அளப்பரிய வியப்பினால் துணுக்க மடைகின்றான். அவன் இதயமோ இதற்கு ஒவ்வா மல் முரணி இது உண்மையாதற் கியலாதென ஒரு வாறு உணர்கின்றது. ஆறெல்லாம் பால் பெருகினும் நக்கிப் பருகும் நாயேபோல், ஆதியுமந்தமு மில்லா மல் கொள்ளையோகொள்ளையென்று காலந்தான் கிடக் கத் தனக்கு வாய்த்தது இவ்வொருசாண் ஆயுள்தானா வென்று அலமருகின்றது அவன்பேதையுள்ளம். கல்வி யேனும் பயிற்சியேனும் ஒருசிறிதும் இல்லாதவரும் இதனைப்பற்றிச் சிந்திக்குமளவில், காலம் என்னும் அதுவே தம்முடைய இச்சைக்குத் தீராப் பகையா யிருக்கின்றதென்பதை உரைக்க இயலாவிடினும்உண ர்ந்துகொள்வாரென்பதுதிண்ணம். ஏனெனில், 'இருக் கின்றேன்' என்னும் இச்சையில் 'நான் இல்லாதவ னாய் இருத்தலுமாகாது' என்ற இச்சையும் இன்றி யமையாமற் கலந்திருக்கின்ற தன்றோ! ஆதலின் தான் பொய்யோ அல்லது காலம் பொய்யோ என்ற ஐயம் விளைதல்வேண்டும். தான் இருப்பதெல்லாம் பொய் என்ற முடிவை, முன்சொன்ன அவ் விச்சையானது இடைப்புகுந்து தடுக்கின்றது. எனின், இக் காலம் என்பதெல்லாம் ஏன் வெறும் பொய்யாகஇருத்தலா காது? 'காலம்' என்னும் இதனை நமக்குப் புறத்திருக் கும் ஒன்றாக வைத்து விவகரிப்பதால் விளையவல்ல விபரீதங்களை முன்னர்க் கண்டோம். எனின், அது நமக்குப் புறத்திருக்குமொன் றாகாமல் நம் கருத்தின் வெறுங் கற்பனையேதான் என்று ஏன் கொள்ளலா காது? இவ்வாறு உறுதிகொள்வதற்கு யாதும் இடை யூறு இல்லாமையோடு அதுவே தக்கது என்றும் இம்மானுயல் காண்ட் (Immanuel Kant) அனைய மேனாட்டுத் தத்துவநூலாசிரியர்களிற் சிலர் வற்புறுத் துவார். இங்ஙனம், காலம் என்னும் கருத்தே கற்பனை யாகிவிட்டால், இச்சையால் "இருக்கின்றேன்" என்று நிச்சயங்கொள்கின்ற மனிதனுக்கு, நாம் இப்பொழுது விவகரிக்கின்ற விதங்களில் காலத்தால் வரையறுக்கப் படும் அலகு இல்லை. ஆகையால், ஒருவன் இருக்கின் றானெனினும், அவன் இருப்பது என்னும் காலம் இல்லையாயின் எஞ்சுகின்ற நிலை யாது என்று இயம்ப வேண்டுமோ! அன்று இன்று எனுதபடி என்றும் இருக்கின்றவர்களாக முடிகின்றோம். ஆன்மா நித்திய மானது என்பதன் தத்துவம்இது. இருப்பது நிச்சயம் என்பதற்கு அவ்விச்சையே சான்று. இவ்விச்சையைத் தான் வோர்ட்ஸ்வோர்த் (Wordsworth) என்ற ஆங்கில கவி Intimations of Immortality எனக்குறித்து, The primal sympathy which having been must ever be என்று அரிதின் விளக்கினார். இந்நித்தியத்துள், பிறப்பு இறப்பு என் னும் இப் புன்மாயத்தோற்றங்களெல்லாம் இடைப் பிறவரல்களாம். நம்முடைய வாழ்நாளை ஒரு விழிப்பு நிலை என எண்ணி விவகரிப்பது போக, அவ் வில்லியம் வோர்ட்ஸ்வோர்த் (தொண்ணூறு வருடங்களுக்கு முன் இவர் இங்கிலாந்தில் ஆத்தானகவியாயிருந்தார்), அந்நித்தியத்தை மறந்து தூங்குகின்ற தூக்கமே நம் பிறப்பென்று பொருள்படும்படி,

Our birth is but a sleep and a forgettng;
The Soul that rises with us, our life's Star,
Hath had elsewhere its setting
And cometh from afar;
Not in entire forgetfulness,
And not in utter nakedness,
But trailing clouds of glory do we come
From God, who is our home.

என்று பாடிய அடிகள் இணையிலாப் பெருமையுடன் ஆங்கில இலக்கியத்தை அலங்கரித்து நிற்கின்றன. இவர் தத்துவசாஸ்திரி அல்லர். காலம் இடம் ஆன் மா உலகம் முதலிய தத்துவங்களை முறையே ஆராய் ந்து எய்திவோர் முடிவன்று இது. இருக்கவேண்டும் என்னும்இச்சை தூண்ட, கலைபொதிந்த அக்கவிவரர் உள்ளம் இவ்வுண்மையைப் பொழியலாயிற்று. ஆங்

கில கவி மற்றொருவர் ராபர்ட் ப்ரௌனிங் என்பவர், "இப் பொழுதை நாய்க்குங் குரங்கிற்கும் விட்டுவிடுங் கள்—மனிதனுக்கோ எப்பொழுதும் இருக்கின்றது" என்று, "வாழ்நாள் முழுவதையும் நீ படிப்பதிலேயே இப்படிக் கழித்துவிட்டால், அதனைத் துய்க்கத்தான் வேண்டாவோ" என்றுதன்னிடத்துவந்து வற்புறுத்தி ஞேர்க்கு ஒரு இலக்கணபண்டிதன் மறுமொழி யளித் ததாகத் தன் நூல்களிலொன்றில், "Leave now for dogs and apes Man has forever" எனப் பாடிய சொற்களும் அந்த நோக்கமே பூண்டிருக் கின்றன.

இவ்வண்ணம் காலதத்துவத்துடன் போராடிநிற் கின்ற நம் இச்சையானது படிப்படியாக ஆன்மநிச் சயத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு, அவரவ ருடைய மனந்தவிர, சமயநூல்கள் தத்துவசாத்திரப் பயிற்சி, மகாநாடுகள் அனையகருவிகள் ஒன்றும் வேண் டியதில்லை. அம் மனம் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி யலையாமல் சிறிதுநேரமேனும் அமைதியுற் றிருக்கு மாயின் ஒருபோதல்லாக்கால் ஒருபோது இவ்வகை நினைவுகளும் விடயங்களும் அதன்பால் எழுந்தே தீர வேண்டும் தற்கால வாழ்க்கைமுறைகளும், வர்த்த மானப் பத்திரிகைகளும், அரசியல் வாதங்களும், சம யப் போர்களும், சீர்திருத்த ஆரவாரங்களும், நம் சர்வ கலாசாலைகளும், இவ் வமைதியோ வாய்க்காவண்ணம் அலைத்துவைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருப்ப தைக் கருதக் கல்லாற்செய்யாத இதயமெல்லாம் இரத தங்கலுழ்ந்து அழுகின்ற அழுகை உயிரோடல்லாது ஒய்வதுங் கூடுமோ!

இடையூறுகள் இத்துணை இருந்தபோதிலும் இவை களுக்கிடையேயும் மனிதர்மனதைத் தன்வயப்படுத்தி அமைதியளிக்கும் பேருதவியை ஆற்றவல்லது கலை யுணர்வு. கலைத்திறம்வாய்ந்த காவியங்களைக் கைகடக்க விட்டுவிட்டுக் கட்டுரைப்ப தென்ன புந்தியோ! யார் மாட்டும் கலையுணர்வு ஓரளவு இயற்கையாகவேஉளது. நித்தியமாய ஆன்மஉண்மைக்கு ஆதாரமாய இச்சையு முளது இவ்விரண்டையும் ஒருங்குடன் வளர்த்து இணைத்துவைக்கின்ற தெய்வமாக்கவிகளின் தூய உற வினைத் தேடித்தருவதன்றிக் 'கலாநிலயம்' தான் செய் யத்தக்க கருமம் வேறொன்று தெரிந்ததில்லையே.

தமிழ்ப் பாடம் 3.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[25-வது பக்கத் தொடர்ச்சி]

தெரிவன நூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—யொருபொழுது
மில்லா தனவு மிரவே யிகழ்ந்தெவருங்
கல்லா தனவுங் கரவு. 5.

பதப்பிரிவு:—தெரிவன நூல் என்றும் தெரியாதன வும் வரி வளையார் தங்கள் மருங்கே ஒரு பொழுதும் இல்லாதனவும் இரவே இகழ்ந்து எவரும் கல்லாதன வும் கரவு.

கருத்து:—அந்நகரத்தில் எல்லாரும் கற்றவர். மாதர் களெல்லோரும் நுண்ணிய இடுப்பையுடைய அழகி யர். பிச்சையெடுக்கும் வறியோர்கள்இல்லை. தம்மிடத் திலிருப்பதைப் பிறர்க்குதவியாக்காமல் ஒளித்துவைக் கும் உலோபிகளும் இருந்திலர்.

பதவுரை.

தெரிவன - யாவருக்கும் தெரிந்திருப்பவை
நூல் - கல்வி,
என்றும் - எப்பொழுதும்
தெரியாதனவும்-ஒருவரும்பார்த்திராதவைகளும்
வரி - கோடுகளையுடைய
வளையார்தங்கள் - வளையல்களை யணிந்த மாதர்களுடைய
மருங்கே - இடுப்புக்களே.
ஒருபொழுதும் - எந்தக்காலத்திலும்
இல்லாதனவும் - இல்லாதவைகளும்
இரவே - பிச்சையெடுத்தலே.
இகழ்ந்து - இது வேண்டாவென்று இகழ்ந்து
எவரும் - யாவரும்
கல்லாதனவும் - கற்காமலிருப்பவைகளும்
கரவு - உள்ளதை ஒளிப்பது.

விளக்கம்:—மாவிந்தநகரத்தி னுள்ளவர்க்கு வஞ் சனை பொறுமை பொய் முதலியன தெரியுமோ? தெரி யாது. ஆயின் அவர்களுக்கு எதுதான் தெரியும்? எது வொன்று தெரியவேண்டுமோ அதுதான் தெரி யும். எதைப்போல்? நூல் - சாஸ்திரங்களைப்போல். தெரிவது நூலாயின் தெரியாது இருந்தது எதுவும் இல்லையா? அவ்வாறன்று, தெரியாத காரணத்தால் எது வொன்று சிறப்பை அதிகப்படுத்துமோ அது வொன்றே அங்குத்தெரியாமலிருந்தது. எதைப்போல்? மருங்கு - இடுப்பைப்போல். யாருடைய மருங்கு? வளையார்தங்கள் மருங்கு - வளையல்களை யணிந்த மாதர்களுடைய இடுப்பு. அவ்வளைகள் எப்படிப்பட் டவை? வரி வளை - கோடுகள் அமைந்த வளைகள். வரி வளையார்தங்கள் மருங்கு எப்பொழுது தெரியாது? என்றும்-ஒருபோதும் தெரியாது. எல்லாம் நிறைந்த அந்நகரத்தில் இல்லாதது உண்டோ? இருக்கப்படா தது மாத்திரம் இல்லை. எதைப்போல்? இரவு - பிச் சையைப்போல். எல்லாரும் எல்லாம் கற்றவரோ? ஆம். ஆனால், இதைக் கற்பது கூடாது என்று எவரே னும் எதையேனும் கற்காது விட்டதில்லையா? அப்படி யன்று, கல்லாது ஒழிக்கவேண்டியவற்றை அவர் கற்ற தில்லை. எதனைப்போல்? கரவு - ஒளித்தலைப்போல் (எதை ஒளித்தல்? தம்மிடத்திலிருக்கின்றவைகளை மற்றவர்களுக்குக் கொண்டுபோய் உதவிசெய்யாமல் ஒளித்துவைத்துக்கொள்வது.)

விரிவுரை:—இந்தச்செய்யுளிலும் முன்செய்யுளிற் காட்டியதுபோன்றே ஒழித்துக்காட்டணியின் உதவி யால் மாவிந்தநகரத்தின் சிறப்பைக் கவி பாராட்டுகின் றார். மாதருக்கு இடைநுண்ணியதாய் இருப்பதே அழ

கு. இந்தத் தன்மையைக் கவிகள் சமையம் கிடைத்த போதெல்லாம் மிகவும் அழகாய்ச் சொல்வர். கண்ணுக்கும் தெரியாத நுண்ணிடையராம் மாவிந்தநகரத்தில் வாழ்ந்த மாதர்கள். அவர் இடையானது பிடிபோல் (பிடி - குவிந்த கைப்பிடி) சிறுத்திருக்கலாம்; அல்லது துடிபோல் (துடி-உடுக்கை) குறுகி இருக்கலாம். ஆனால் புகழேந்திப்புலவர் சொல்லும்விதம் கண்ணுக்கே தெரியாது இருந்தால் மாதர் கதி என்ன ஆவது. அவர் இடுப்பு மிகச் சிறியது என்பதே கருத்து. புகழேந்தியாவது, இடுப்பு இருக்கலாம், எனினும் கண்ணிற்குத் தெரியவில்லையென்றார். கம்பரோ சீதையை, 'மருங்கே இல்லாத நங்கை' ஆக்கிவிட்டார். கேட்போர் மகிழும்படி சிறியதை மிகச் சிறியதாகவும் பெரியதை மிகப் பெரியதாகவும் சாமர்த்தியமாய்க் கூறுவதும் அணிகளுள் ஒன்று. இதற்கு உயர்வுநவிற்சி அணி (உயர்வு - மிகுதியாக, நவிற்சி - சொல்லப்படுகின்ற, அணி - அழகு) என்று பெயர். வடமொழியார் இதை அதிசியோக்தி அலங்காரம் என்பர். பொதுவாக இந்த உயர்வுநவிற்சி அணியின் தன்மையைக் காட்டினோமே யல்லாது, அது அமைகின்ற விதங்களை எல்லாம் இங்குச் சொல்லவில்லை. முன் சொன்ன ஒழித்துக்காட்டணியைப்போல் இதை வந்தவிடத்தில் கண்டுகொள்வதற்குச் சிறிது பழக்கம் வேண்டும். சந்தேகம் இருப்பதற்கே இடமில்லாத விஷயத்தில் சந்தேகம் இருப்பதுபோல் பாவித்துப் பெருமை படுத்துவதும் கூட உயர்வுநவிற்சி யணியாகும். அப்படியே, இல்லாததை இருக்கிறதென்பதும், இருப்பதை இல்லை யென்பதும், சம்பந்தம் இல்லாத இரண்டிற்குச் சம்பந்தம் கற்பிப்பதும், சம்பந்தம் இருப்பவைகளைப் பிரித்துவிடுவதும், காரண காரியங்களை ஒன்றாய் நிகழ்த்திவிடுவதும் ஆகிய இவைபோன்ற அதிசயங்களை யுக்தியால் அழகுபெறக் கூறுவதெல்லாம் உயர்வு நவிற்சி யணி ஆகும்.

ஒருவனிடத்தில் போய் யாசகம் செய்வது மிகவும் இழிவானது. ஏற்பது இகழ்ச்சி. ஆனால் அதனினும் இழிவானது கொடாதிருப்பது. இயல்வது காத்தல். இதுகருதியே புகழேந்திப் புலவர், 'இகழ்ந்து' என்னும் மொழியைக் கரவோடு சேர்க்கின்றார். ஏற்பவர் இல்லாத நாட்டில் இயல்வதுகரப்பவர் இருப்பதெங்ஙனம். ஆதலால் கரவு இல்லையென்று கூறல் மிகையன்றோ, என்று ஒருவேளை எண்ணலாம். இரப்பவர் இல்லாதிருந்தால் கொடையாளிகளுக்கே கருமமில்லாமற் போய்விடுமென்பது உண்மைதான். அயோத்தியில் 'கொள்வாரிலாமைக் கொடுப்பார்களுமில்லை' என்றார் கம்பர். தருமநூல்களில் கூறியபடி இரப்பது இகழ்ச்சி என்று ஒருவரும் கேட்காதிருந்தால் கொடையென்னும் அறத்தைக் கையாள்வதற்கு யாருளர்? இரவச்சம் காட்டிய திருவள்ளுவர் ஈகையைப்பாராட்டி என்ன பயன்! இதற்கு உத்தரம் மிக எளிது. திருவள்ளுவரே தக்க விடையுங் காட்டி இருக்கின்றார். கேட்டபின் கொடுப்பது கொடையன்று. அது இல்லை என்று மறுப்பதையேநிகர்க்கும். பிறரெவரும் நம்மை வந்து கேட்கும்வரையில் காத்திருக்காமல், நாமே சென்று அவ்வவர் குறையை அறிந்து தீர்த்தல்வேண்டும். அப்படித் தீர்க்கும்போதும் நம்மால் ஒரு உதவி அவன் அடைகின்றான் என்னும் நினைவு அவனுக்கு வராதபடி நடந்துகொண்டால் இகழ்ச்சி பிறப்பதற்கு இடமில்லை. நம்மிடத்தில் ஒன்று பெறுகின்றவன் பெறுவதால் நமக்கே ஒரு உதவிசெய்வதாக நினைக்கும்படி நாம் நடந்துகொள்ளல் வேண்டும்.

"இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு"

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலமுடையான் கண்ணே யுள."

என்னுமிவ்விரண்டு திருக்குறள்களையும் உரையோடு படித்துணர்ந்து இரவச்சத்திற்கும் ஈகைக்கும் இருப்பதாய்த் தோன்றும் முரண் இல்லாமை தெளிந்து கொள்க.

—

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்-காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 6.

பதப்பிரிவு :—மா மனு நூல் வாழ வரும் சந்திரன் சுவர்க்கி தாமரையாள் வைகும் தட தோளான் காமரு பூ தாரான் முரணை நகர்தான் என்று சாற்றலாம் பார் ஆளும் வேந்தன் பதி.

அன்வயம் :—பார் ஆளும் வேதந்தன்பதி, தாமரையாள் வைகும் தடந்தோளான், காமரு பூந்தாரான், மா மனுநூல் வாழ வரு சந்திரன்சுவர்க்கி, முரணை நகர் தான் என்று சாற்றலாம்.

கருத்து:—நளன் ஆண்ட மாவிந்தநகரத்தை எல்லா விதச் சிறப்பினும் உயர்ந்த சந்திரன்சுவர்க்கி என்பவனுக்கு நகரமாகிய முரணை என்னும் நகரமென்றே கூறலாம்.

பதவுரை

பார் - உலகத்தை
ஆளும் - ஆள்கின்ற
வேந்தன் - அரசனாகிய நளனது
பதி - தலைநகராகிய மாவிந்தத்தை,
தாமரையாள் - தாமரையில் வசிப்பவளாகிய வீரஇலக்குமி
வைகும் - தங்கிய
தட - பெரிய
தோளான் - தோள்களை யுடையவனும்,
காமரு - அழகிய (காமர் என்னும் பதமே காமரு என்றும் வரும்)
பூ - பூக்களால் கட்டிய
தாரான் - மாலையை அணிந்தவனும்,
மா - சிறந்த
மனுநூல் - மனுதர்மம்
வாழ - (கெடாமல்) வழங்கும்படி
வரு - பிறந்தவனும், ஆகிய
சந்திரன்சுவர்க்கி - சந்திரன்சுவர்க்கி என்னும் பேருடைய அரசனது
முரணை - முரணை என்னும்
நகர்தான் - நகரே
என்று - என்று
சாற்றலாம் - சொல்லலாம்.
(சாற்றல - சொல்லுதல், ஆம் - பொருந்தும்)

விளக்கம் :—ஆம் - ஆகும்-பொருந்தும் (பயனிலை.) எது பொருந்தும்? சாற்றல்-சொல்லுதல் (எழுவாய்)

எதைச் சாற்றல் ஆகும்? பதி - (மாவிந்த) நகரத்தை. யாருடைய நகரத்தை? வேந்தன் பதி - (நள) வேந்தனுடைய நகரத்தை. என்ன செய்கின்ற வேந்தன் அவன்? ஆளும் வேந்தன்-ஆள்கின்ற வேந்தன். எதை ஆளும் வேந்தன்? பார் - பூமியை. பார் ஆளும் வேந்தன் பதியை என்ன சாற்றல் ஆகும்? என்று-என்று. என்ன என்று? நகர்தான் என்று - நகரே என்று. எந்த நகரே என்று சாற்றலாம்? முரணை என்று-முரணைநகர் என்று. யாருடையது அந்த முரணைநகர்? சந்திரன்சுவர்க்கி முரணை-சந்திரன்சுவர்க்கியினுடைய முரணை. அந்தச் சந்திரன்சுவர்க்கி எதை உடையவன்? தோளான்-தோள்களை உடையவன். எப்படிப் பட்ட தோள்கள் அவை? தடந்தோள் - பெரிய தோள்கள். இன்னும் எப்படிப்பட்ட தோள்? வைகும் தோள் - வசிக்கும் தோள். யார் வசிக்கும் தோள்? தாமரையாள் - இலக்குமி. தாமரையாள் வைகும் தடந்தோளான் ஆகிய சந்திரன்சுவர்க்கி இன்னும் எதை உடையவன்? தாரான் - மாலையை உடையவன் (தார் - மாலை, அதை உடையவன் தாரான்). என்ன தார்? பூந்தார் - பூமாலை. அந்தப் பூமாலை எப்படிப்பட்டது? காமரு-அழகியது. அழகிய பூமாலையை அணிந்தவனும், இலக்குமி வசிக்கும் பெரிய தோள்களை உடையவனுமான அந்தச் சந்திரன்சுவர்க்கி எப்படிப்பட்டவன்? வரு சந்திரன் சுவர்க்கி - வரு - வந்த, பிறந்த சந்திரன்சுவர்க்கி. எதற்குப் பிறந்த சந்திரன்சுவர்க்கி? வாழ வரு - வாழ்விக்கப் பிறந்த. எது வாழ? நூல் - சாஸ்திரம். எந்த நூல்? மனு நூல் - மனுதர்ம சாஸ்திரம். அந்த மனு நூல் எப்படிப்பட்டது? மா மனுநூல் - சிறந்த மனுநூல்.

விரிவுரை:—சந்திரன்சுவர்க்கி யென்பவன் உறையூரைச் சேர்ந்த மள்ளுவநாட்டிற்கு அரசன். முரணை அவனது தலைநகரம். அவன் புகழேந்திப்புலவரைப் பெரிதும் ஆதரித்து இந்த நளவெண்பாவையும் பாடுவித்தான். அதற்குக் கைம்மாறாக நம்புலவர், மாவிந்தத்தின் பெருமையெல்லாம் சொல்லிப் பின் அதற்கு இணையாகச் சொல்லக்கூடியது முரணைநகரொன்றே, எனப் புகழ்ந்து தன்நன்றியை இச்செய்யுளில் செலுத்துகின்றார். இப்படியே கதையோடு சேர்த்துத் தம்மை ஆதரித்தவர்களைப் புகழ்ந்துகொண்டாடும் வழக்கம் கவிகளுக்குண்டு. கம்பரை ஆதரித்தவன் சடையப்பவள்ளல் என்பவன். சந்திரோதயத்தை வர்ணிக்கின்றபோது அவர், விரிந்த நிலவானது சடையப்பவள்ளலின் புகழ்போல உலகெங்கும் பரவியதென்றும் (பாலகாண்டம், மிதிலைக்காட்சிப் படலம் 73-வது செய்யுள்), கடலுக்கு அணையிட்ட குரங்குகள் மலைகளைப் பிடுங்கி எறியவும் அவைகளைத் தவறாமல் நளன் என்னும் குரங்குத்தலைவன் ஏந்திய தன்மை, தஞ்சமென்றோரைச் சடையன் தாங்குதல்போல இருந்ததென்றும், (யுத்தகாண்டம், சேதுபந்தனப் படலம், 9-வது செய்யுள்), இராமனுக்கு மகுடாபிஷேகம் செய்யும்போது முடியைச் சூட்டும்படி சடையப்பவள்ளலது முன்னோர்களை எடுத்து வசிட்டன்கையில் கொடுத்தார்களென்றும் (உயுத்தகாண்டம். திருவபிடேகப் படலம் 37-வது செய்யுள்) நன்றி பாராட்டுகின்றார். அவ்வாறே வில்லிபுத்தூரார் தனது உபகாரியைப் பாரதத்தில் கொண்டாடக் காண்கிறோம். (கன்னபர்வம், பதினாறும் போர்ச்சருக்கம், 90-வது செய்யுளும், பதினேழாம் போர்ச்சருக்கம் 33-வது செய்யுளும்).

ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டூடா
முருகுடைய மாதர் முலைநணைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னங்கு. 7.

பதப்பிரிவு:—ஓடாத தானை நளன் என்று உளன் ஒருவன் பீடு ஆரும் செல்வம் பெடை வண்டோடு ஊடா முருகு உடைய மாதர் முலை நணைக்கும் தண் தார் அருகு உடையான் வெள் குடையான் ஆங்கு.

அன்வயம்:—ஆங்கு, பீடுஆரும் செல்வப்பெடை வண்டோடு ஊடா, முருகு உடைய மாதர் முலை நணைக்கும் தண்தார் அருகுஉடையான், வெள்குடையான், ஓடாததானை நளன் என்று உளன் ஒருவன்.

கருத்து:—வண்டுகள் அடர்ந்த குளிர்ந்த பூமாலையை அணிந்தவனும், வெண்கொற்றக் குடையையுடையவனும், பகைவருக்குப் பின்னிடாத சேனையை உடையவனும் ஆகிய நளன் என்ற அரசனொருவன் அங்கு இருந்தான்.

பதவுரை.

பீடு - பெருமை
ஆரும் - பொருந்திய
செல்வம் - சீர்பெற்ற
பெடை - பெண்வண்டுகள்
வண்டோடு - ஆண்வண்டுகளோடு
ஊடா - ஊடல்கொண்டு பிணங்க
முருகு - (அதனால் மலர்களிலிருந்து) தேன்
உடைய - அவிழ (அதனால் தன்னை யணைந்த)
மாதர் - மாதர்களுடைய
முலை - முலைகளை
நணைக்கும் - நணைக்கவல்ல
தண் - குளிர்ச்சிபொருந்திய
தார் - பூமாலையை
அருகு - (தனது மார்பிற்கு) அருகில்
உடையான் - உடையவனும்,
வெள் - வெண்மையான
குடையான் - குடையை உடையவனும்,
ஓடாத - (பகைவருக்கு முதுகுகாட்டி) ஓடாத
தானை - சேனையை உடையுவனும் (ஆகிய)
நளன் - நளன்
என்று - என்று
ஒருவன் - ஓர் அரசன்
ஆங்கு - அந்நகரத்தில்
உளன்-இருந்தான்.

விளக்கம்:—உளன் - இருந்தான் (பயனிலை). எங்கு உளன்? ஆங்கு - அந்த மாவிந்தநகரத்தில். யார் உளன்? ஒருவன் (எழுவாய்). அவன் யார்? நளன் என்று ஒருவன். அவன் எதை உடையவன்? தானை-சேனை. அந்தச் சேனை எப்படிப்பட்டது? ஓடாத தானை - போரில் பின்னிட்டு ஓடாத சேனை. இன்னும் எது உடையவன்? தார் உடையான் - மாலையை உடையவன். மாலையை எங்கு உடையவன்? அருகு உடையவன்-மார்பிற்குச் சமீபத்தில், அதாவது, மார்பில் உடையவன். அந்தத்தார் எப்படிப்பட்டது? தண் தார் - குளிர்ந்த மாலை. அந்தத் தண்தார் என்னசெய்ய வல்லது? நணைக்கும் - நணையும்படி செய்யவல்லது. தார் எதை நணைக்கும்? முலை நணைக்கும் - முலைகளை நணைக்கும். யாருடைய முலைகளை? மாதர் முலை - மாதர்களுடைய முலைகளை. முலையை நணைக்க நேர்வது எத

னால்? உடைய - நெகிழ்வதால். எது உடைய? முருகு உடைய - தேன் வழிய. எப்படி முருகு உடைகின்றது? ஊடா - ஊடி. எதனோடு ஊடா? வண்டோடு ஊடா-ஆண்வண்டினோடு ஊடி. ஆண்வண்டோடு எது ஊடி? பெடை - பெண்வண்டு. அந்தப் பெடை எப்படிப்பட்டது? செல்வப்பெடை - சீர்பெற்ற பெண் வண்டு. இன்னும் அப்பெடை எப்படிப்பட்டது? ஆரும்பெடை - பொருந்திய பெண்வண்டு. என்ன பொருந்திய பெடை? பீடு ஆரும் பெடை -பெருமை பொருந்திய பெண்வண்டு. இன்னும் அந்த நளன் எதை உடையவன்? குடையான் - குடையை உடையவன். எப்படிப்பட்ட குடை? வெண்குடை - வெண்மையான குடை.

விரிவுரை:—நாட்டினது வளத்தை முதற்செய்யுளாலும், நகரினது செல்வத்தையும் இன்பத்தையும் மாந்தர் தம் தன்மையையும் அடுத்த நான்கு செய்யுளாலும் காட்டிய புலவர், இச்செய்யுளால் அந்நாட்டு அரசனது பேரும் பெருமையும், இதற்கடுத்த செய்யுளால் அவன் உலகங்காத்த முறையும் செப்புகின்றார்.

மாலையிலுள்ள பூக்களை மொய்க்கின்ற வண்டுகளுக்குள் பெண்வண்டுகள் தத்தம் ஆண்வண்டுகளோடு ஊடல்கொள்ள, அவ்வூடலைத் தணிப்பதற்கு ஆண் வண்டுகள் நெருங்குவதும் நெருங்கிய அவைகளைக் கோபத்தோடு பெண்வண்டுகள் வலிந்து விலக்குவதும் நேர்வதன் காரணமாய்ப் பூக்களுக்குள் உண்டாகும் கலகத்தால் கட்டழிந்துதேன்பெருகுமென்று, வண்டு போன்ற சென்துக்களிடத்திலும் மாந்தர்க்குரிய தன்மையைக் கவி ஏற்றியுளர்.

குறிப்பு:—(1) மாது, என்னும் பதத்திற்கு அழகு என்று பொருள். அதை உடைய பெண்ணிற்கும் 'மாது' என்று பெயர் ஆகும் மாது என்னும் பதமே மாதர் என்றும் வரலாம். அப்பொழுது பெண், என்ற பொருளில் ஒருமையே குறிக்கும். அல்லது மாதர் என்பதைப் பல பெண்கள் என்று பன்மையாகவும் கொள்ளலாம். ஒரு தன்மை அல்லது குணத்தைக் குறிக்கும் பதமே சில சமயத்தில் அந்தத் தன்மை அல்லது குணத்தைப் பெற்றிருக்கின்ற பொருளுக்கும் வரும். காரிகை, என்பது பெண் என்னும் குறிப்பை உடையது. ஆனால் காரிகை என்னும் பதத்திற்கு 'அழகு' என்று அர்த்தம். அந்தக் காரிகை (அழகு) என்னும் குணத்தை உடையவளுக்கும் 'காரிகை' என்று பெயர் ஆயிற்று. 'ஊர் சிரிக்கும்' என்ற வழக்கத்தில் ஊர் என்ற இடம் அந்த இடத்திலுள்ள சனங்களுக்குப் பெயர் ஆகின்றது. இப்படிக் குணம் இடம் முதலியவைகளைக் குறிக்கும் சொற்கள் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட பொருளுக்கே பெயர் ஆகி நிற்குமபோது அந்தச் சொற்களுக்கு ஆதுபெயர் என்று பெயர். மாது, காரிகை, எனும் இவை அழகு என்னும் குணத்தை மாத்திரம் காட்டும் பண்புப்பெயர் (பண்பு-குணம்). ஆனால் அந்தக் குணத்தையுடைய பெண்ணைக் காட்டும்போது ஆதுபெயர் (ஒரு சம்பந்தத்தால் ஆகின்ற பெயர்.) குண சம்பந்தத்தினால் ஆனதால் குணவாகுபெயர். அப்படியே ஊர் சிரிக்கும், என்பதில் ஊர் என்னும் இடப்பெயர் ஊரிலுள்ளவர்க்கு ஆனதால் அது இடவாகுபெயர். இதுதான் ஆகுபெயரின் இலக்கணம். ஆகுபெயர்கள் தமிழிலக்கணத்தில் பதினாறு விதங்கள் இருக்கின்றன. அவைகளைப் பின்னொருபோது பார்ப்போம்.

2 ஊடா-(ஊடி). இந்தச்சொல் இங்குச் சாதாரணமாக வழங்கும் எதிர்மறை (negative) உருவத்தில் இருந்தாலும், வாஸ்தவத்தில் ஊடி என்ற உடன்பாட்டுப் (positive) பொருளையே உடையது. இப்படி உருவம் இருக்கும்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தான் உடன்பாடு என்றும் அல்லது எதிர்மறை என்றும் தெரிந்துகொள்ளவேண்டும். 'இவன் என் வீட்டிற்கு வந்து கோபத்தோடு உண்ணாச் சென்றான்', என்ற வாக்கியத்தில் உண்ணா என்பது உண்ணாமல் என்ற எதிர்மறைப் பொருளது. 'என் வீட்டிற்குவந்து சந்தோஷமாய் உண்ணாச் சென்றான்' என்னுமிடத்து 'உண்டு' என்ற உடன்பாட்டுப் பொருள் கொடுக்கும். இப்படி ஊடா உண்ணா காணா என்னும் உருவத்தில் வரும் சொற்கள், ஊடாச் சென்றாள் உண்ணாச்சென்றான் காணாச்சென்றான், என்று சென்றாள் சென்றான் என்பன போன்ற வினைச்சொற்களைக் கொண்டு (verbs) அர்த்தம் முடிகின்றபோது அவை வினையெச்சங்கள். இதே உருவத்தில் இருக்கும் சொற்கள் சில சமயத்தில் பெயர்ச்சொற்களைக் (nouns) கொண்டு முடியுமானால் அப்பொழுது பெயரெச்சங்கள் ஆகிவிடும். ஊடா மனைவி, உண்ணா விருந்து, காணாக்கண் என்று வரும்போது பெயரெச்சம். அப்படி (வினையெச்சமாயல்லாது) பெயரெச்சமாக வரும்போது, ஊடாத மனைவி, உண்ணாத விருந்து காணாத கண்' என்று எதிர்மறைப்பொருளை மாத்திரம் தரும். பெயரெச்சத்தில்இவைகளுக்குஉடன்பாட்டுப்பொருள் இல்லவே இல்லை. காணாக் கண், என்பதில் காணா என்பது எதிர்மறைப் பெயர் எச்சம் காணாத என்பதுதான் அதன் சரியான உருவம். ஆனால் கடைசியில் இருந்த'த'என்னும் எழுத்துக் கெட்டுப்போய்க் 'காணா' என்று மாத்திரம் எதிர்மறைப் பெயரெச்சமாய் நிற்பதால், அதைப்போல் வருகிற சொற்களுக்கு ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது பெயர். உண்ணா மகிழ்ந்தான், என்னும்போது உண்டு மகிழ்ந்தான் என்று உடன்பாட்டு வினைஎச்சமாகவும்; உண்ணாச் சோர்ந்தான், என்னும்போது உண்ணாமல் சோர்ந்தான் என்று எதிர்மறை வினையெச்சமாகவும்; உண்ணாக்குழந்தை, என்னும்போது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும்; இன்னும் புலிகள் புல் உண்ணா, என்னும்போது எச்சமேயல்லாமல் வினைமுற்றாகவும்; ஒரேசொல் ஒரே உருவத்தில் பல விதமாய்த் தமிழில் வருவதைக் காண்க. (எச்சவினை என்பது ஆங்கிலததில் infinate verb, வினைமுற்று என்பது finate verb).

குன்றுடையானும் மக்களும்

[29-வது பக்கத் தொடர்ச்சி]

இதுகாறும் அன்புடையவர்கள்போல்நடித்த பங்காளிகளும் தம் மனைவியர்களோடு சேர்ந்துகொண்டு வெளிப்படையாகக் குன்றுடையானுக்குக் கொடுமை செய்யத் தலைப்பட்டார்கள். குன்றுடையானைப் பட்டினி கிடத்தி, வேலையை அதிகமா யிட்டால் அவன் இளைத்துப்போய் இறந்துவிடப் பின் தாங்கள் அவன் சொத்தையெல்லாம் வைத்துக்கொள்ளலாம் என்பது அவர்களுடைய உள்ளக்கிடக்கை.

நாள்கள் செல்லச்செல்லக் குன்றுடையானுக்குக் கொடுமை வளர்ந்தது. அவனுக்கு ஒருவேளை வயிறு நிறையச் சோறு கிடைப்பதும் அரிதாகிவிட்டது. அண்ணியர்கள் பழையது கொடுப்பதை நிறுத்திச் சிலநாள் கூழை வார்த்தார்கள். பின்பு சோற்றுத் தண்ணீரையே ஊற்றத் தொடங்கினர்கள். நாள்தோறும் இருபத்துநான்கு குடம் தண்ணீர் சுமந்து, இட்ட வேலை செய்து மாடுமேய்த்துமேய்த்துக் குன்றுடையானுக்குக் காலயர்ந்தது; கண்கள் குழிந்தன; கைகால்கள் மெலிந்தன; வயிறு ஒடுங்கிற்று; உடம்பில் எங்கும் எலும்புகளே விளக்கமுற்றுத் தோன்றின; ராகி நெரித்து நெரித்து மெலிந்த அவன்கைகள் காய்ப்பேறின; கல்லிலும் முள்ளிலும் நடந்து மாடு ஓட்டியோட்டி உள்ளங்கால்கள் தேய்ந்து புண்பட்டன. யானைக்குட்டிபோலிருந்த குன்றுடையான் எலும்புந் தோலு மாயினன்! நாவிதன் கத்திபட்டுப் பலநாட்களானமையால் தலைமயிரும் தாடி மீசைகளும் நீண்டு வளர்ந்து தொங்கி அலைந்தன; அரைவேட்டி மாசடைந்து கிழிந்து கந்தையாயிற்று; மேல்வேட்டி கிழிந்துபோய்ப் பல மாதங்களாயின. குன்றுடையானுக்கு நாளுக்கு நாள் பலம்குறையவே சிறிது தூரங் கூட உட்காராமல் நடப்பதும் அரிதாயிற்று

அண்ணியர்கள் அவன்மீது சிறிதும் இரக்கமற்றவர்களாய் உணவைக் குறைத்து வேலையை முன்னினும் அதிகமா யிட்டார்கள். அவன் வேலை செய்து அலுப்புற்றுச் சிறிது இளைப்பாற உட்கார்ந்ததைக் கண்டவுடன் அவர்கள், 'மொக்கை உலக்கைபோல் இருந்துகொண்டு இந்த வேலையைக்கூடச் செய்ய முடியவில்லையோ?' என்றுசொல்லிச் சினந்து விளக்குமாற்றாலும் பழமுறத்தாலும் புடைக்கத் தொடங்கினர்கள்; அவன் சோர்ந்துகிடத்தலைக் கண்டு காலாலுதைத்துக் கண்டபடி யேசினர்கள். வயிற்றிற்குக் கஞ்சி தவறாமல் ஊற்றிப் பின் அண்ணியர்கள் வைதாலும் அடித்தாலும் பொருட்படுத்தாமல் குன்றுடையான் இட்டவேலையைச்செய்யக்கூடியவனே. உண்ணச் சோறில்லாதபொழுது, பாவம், என்ன செய்வான்? வசவு வாங்கியும் அடிபட்டும் தன்னாலியன்றவரையில் அடிமேல் அடிவைத்துத் தள்ளாடி நடந்து மாடுமேய்த்துப் பட்டிக்குச் சோறுசுமந்து அயர்ந்தான் ஐயோ!

ஒருநாள் மழைக்காலத்தில், ஐப்பசி வழுக்கலில், குன்றுடையான் மழையால் நனைந்து, குளிரால்நடுங்கி கந்தையுடுத்திப் போர்த்துக்கொள்வதற்கு ஒன்றுமில்லாமல் தள்ளாடி மாடு ஓட்டிக்கொண்டு போவதைப் பாய்ச்சலூர்ச் சாவடியிற் பத்துப்பெயர் குடியானவர்கள் கண்டு, குன்றுடையானது கொடுமைக் கிரங்கி, 'ஐயோ! இந்தப் பாவிகளான பங்காளிகள் கொஞ்சமும் இரக்கமில்லாமல் குன்றுடையானை இப்படி வதைக்கின்றார்களே. இவர்கள் நல்லகதி யடைவார்களா? அவன் சொத்தையெல்லாம் பங்கிட்டுக் கொண்டு உண்ணச்சோறும் உடுக்கத் துணியுங் கொடுக்காமல் பெண்டாட்டிகளையுஞ் சேர்த்துக் கொண்டு இந்த அநியாயம் பண்ணுகிறார்களே; இவர்களுக்கு இந்தச் சொத்து நிலைக்குமா?' என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். அவர்களில் ஒருவன், உடுக்கத் துணி கொடாவிட்டாலும்; குளிருக்கு ஒரு கம்பளியாவதுகொடுக்கக்கூடாதா, இந்தப்பாவிப் பயல்கள்! என்றான். மற்றொருவன், 'அடே, அவன் பொறுமை பொறுத்தவன். அவன் சாபம் இவர்கள் குடும்பத்தைக்கருவறுக்கும்' என்றான். இதற்குள்குன்றுடையான் மாடு ஓட்டிக்கொண்டு அவர்களுக்கருகே வருதலும், அவர்களில் ஒருவன், 'குன்றுடையா கவுண்டா, இந்தக் குளிரில் இப்படி நடுங்கிக்கொண்டு போகிறாயே, ஒரு கம்பளி வாங்கிக்கொடுக்கச் சொல்லிப் போர்த்துக்கொள்ளக்கூடாதா? என்றான். மற்றொருவன், "ஐயோ! குளிரால் அவனுக்குப் பல்லெல்லாம் கிட்டிக்கொண்டதே!' என்றான்.

குடியானவர்கள் இப்படி அன்போடும் இரக்கத்தோடும் பேசிய பேச்சைக்கேட்டுக் குன்றுடையான் மறுமொழிசொல்ல நாவெழாதவனாய்த் தாரைதாரையாய்க் கண்ணீர்பெருக்கி, முன்கைகளால் மூக்கையுங் கண்ணையுந் துடைத்து, விம்மிவிம்மி யழுதுகொண்டே மாடுகளை ஓட்டிச் சென்றான்.

அவனுடைய துயரத்தைக்கண்ட ஊரார்கள் பொறுக்கமாட்டாதவர்களாய் ஒன்றுகூடிப் பங்காளிகளிடம் போய், 'நீங்கள் எல்லோரும் இருக்கையில் உங்கள் தம்பி இந்த ஐப்பசி வழுக்கலில் கால்சறுக்கக் குளிருக்கு ஒரு கம்பளியுமில்லாமல் நடுங்கிப்போகிறானே, அவனுக்குக் கொங்காடை போட்டுக்கொள்ள ஒரு கம்பளி வாங்கிக் கொடுக்கக்கூடாதா? என்று கேட்டார்கள் பங்காளிகள் சினந்து, 'உங்களை இந்த நியாயம் பேசச்சொல்லிக் கூப்பிட்டவர் யார்? உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு போங்கள். குன்றுடையானை ஆதரிப்பவர்கள் நாங்களா, நீங்களா? இவ்வளவு பரிந்து பேசவந்த நீங்கள் ஆத்திரமிருந்தால் ஒரு கம்பளி வாங்கிக் கொடுக்கலாமே' என்றார்கள்.

குடியானவர்கள் நாணத்தோடு திரும்பிப்போய், கூட்டங்கூடி, தங்களுக்குள் காற்பணம் அரைப்பணம் வசூலித்து, குளிருக்குக் கொங்காடையாகும்படிஐந்து பணத்தில் ஒரு கம்பளி வாங்கி, வழுக்கலுக்கு ஊன்றுகோலாக ஒரு கவைக்கோல் செய்வித்து, குயவன் வீட்டில் ஒரு கலயம் வாங்கிவந்து, மறுநாள் குன்றுடையான் மாடு ஓட்டிக்கொண்டு போகையில் இவற்றை அவனிடங்கொடுத்து, 'நீ இந்தக் கம்பளியைக் கொங்காடையாக மடித்துப் போட்டுக்கொள்; இந்தக் கவைக்கோலை ஊன்றி நட; இக்கலயத்தில் தண்ணீர் கொண்டுபோய் வேண்டியபொழுது குடித்துக்கொள்' என்று சொல்லி யனுப்பினர்கள்.

அவ்வூரிலுள்ள பெண்களிற் சிலர் குன்றுடையான் வயிற்றுக் கில்லாமல் அலைவதைப் பார்த்து இரக்கங் கொண்டு, பங்காளிகள் பார்த்தால் கோபித்துக்கொள்

வார்கள் என்று அஞ்சி, அவனை ஒருவரு மறியாமல் அழைத்து வயிறுநிறையச் சோறு போடுவா ராயினர். அவன் சாப்பிட்ட பின்னர்ச் சிலர் அவனைச் சூழ்ந்து நின்று, அவன் பிறந்த அருமையையும் வளர்ந்த அருமையையும் பின் இப்பங்காளிகளிடம் படும்பாட்டையும்சொல்லிச்சொல்லிஅங்கலாய்ந்தனர். ஒருத்தி குன்றுடையானை நோக்கி, 'ஏன், குன்றுடையானே, நீயும் சிவனே யென்று பிழைத்திருந்து, பங்காளிகளிடத்தில் உன் சொத்தைப்பெற்று, வாழ்வாயா? அவர்களும் கொடுப்பார்களா? கொடுக்காமற்போனால் நீ என்ன செய்யப்போகிறாய்? என்று கேட்டாள். அதற்குக் குன்றுடையான் என்றுமில்லாத துணிச்சலோடு, 'எனக்கும் ஒரு காலம் வரும். அப்பொழுது என் சொத்தைக் கொடுக்காவிட்டால், பங்காளிகளைச் சும்மா விடுவேனா? அவர்கள் மூக்கில் தும்பைச்சாற்றைப் பிழிந்து சொத்தை வாங்கமாட்டேனா?' என்று மறுமொழி சொன்னான்.

இவ்வாறு குன்றுடையான் சொன்ன வார்த்தைகள் எவ்வாறோ பங்காளிகள் காதுக் கெட்டின. பங்காளிகள் பன்னிருவரும் ஒன்றுகூடி, "ஆ! ஆ! இந்தப் பையனுக்கு இவ்வளவாயிற்றா? அவனுக்குச் சரியான புத்தி கற்பிக்கவேண்டும். அந்தப் பைத்தியத்தைக் கட்டிக்கொண்டழுகிற இந்த ஊரார்க்கும் கொஞ்சம் சூடு காட்டவேண்டும்" என்று பேசி; பாய்ச்சலூரில் குன்றுடையானுக்குச் சோறு போடுபவர்களும் ஆடை கொடுப்பவர்களும் ஊருக்குப் புறம்பானவர்களாய்க் கருதப்படுவார்க ளென்றும், அவர்களுக்கு ஊரிலுள்ள வண்ணார்களும் நாவிதர்களும் ஊழியஞ் செய்யக்கூடாதென்றும் பறைசாற்றுவித்தார்கள்; மனைவியர்களை ஏவிக் குன்றுடையானது கொழுப்பை யடக்கும்படி தூண்டினார்கள்.

பங்காளிகளுடைய அதிகாரத்திற்குப் பயந்து குன்றுடையானுக்கு ஊரார் மீண்டும் உதவிபுரியத் துணியவில்லை. அண்ணியர் அவனை முன்னிலும் கொடுமையாக நடத்தத் தலைப்பட்டனர். குன்றுடையானது நிலைமை பொறுக்கமுடியாத தாயிற்று.

இப்படியிருக்கும்நாட்களிலே, ஒருநாள், குன்றுடையான் மாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போகையில், குளிருங் காய்ச்சலுந் தலைவலியுங் கண்டு, தடுமாறி நடந்து மலைக்காட்டையடைந்து, பசியும் வருத்தக் களைப்புற்று, வழியினயலில் இருந்த ஒரு சீங்கிமுட்புதரில் கம்பளியை விரித்துத் தலைசாய்த்துப்படுத்தான். பங்காளிகள் செய்த கொடுமையையும் தனக்கு நேர்ந்த கதியையும் நினைந்துஅழுது, தனது குலதெய்வமாகிய செல்லாண்டியம்மனைக் கூவி முறையிட்டான்; இவ்வாறு சிறிதுநேரங் கழிய, களைப்பினால் மெய்ம்மறந்து தூங்கினான். பொழுதுபட்டது.

குன்றுடையான் ஓட்டிக்கொண்டுபோன மாடுகள் சிறிதுதூரம் நடந்து, மேய்ப்பவனைக் காணாமல், நின்று திரும்பிப் பார்த்து, மீண்டு, காட்டையடைந்து மேய்ந்தன. மாலைப்பொழுதில் தண்ணீர் குடித்துக் குன்றுடையான் படுத்த புதருக்கருகிலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தையடைந்து, அதனடியிற்படுத்து, குன்றுடையான் வந்து தம்மை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு போவான் என்றெண்ணி அசை மென்றுகொண்டிருந்தன.

அந்திப்பொழுதாகியும் மாடுகள் தம் வீட்டுக்குத் திரும்பி வாராதது கண்டு அண்ணியர்கள், 'பாழாய்ப் போனவன் இன்னும் ஏன் வரவில்லை? பாம்பு கடித்ததோ? புலிக்கிரையானானோ? அப்படித் தொலைந்தால் விட்டது சனி' என்று பலவாறு பேசிக்கொண்டு கணவர்களை எதிர்பார்த்திருந்தார்கள்.

காடுகரை போயிருந்த கவுண்டர்கள் விளக்குவைக்கும்வேளையில் தங்கள் வீடுவந்து சேர்ந்து, மனைவியர் சொன்ன முறைகேட்டு, உடனே புறப்பட்டுக் குன்றுடையானையும் மாடுகளையும் தேடிக்கொண்டு மலைக் காட்டை அடைந்தார்கள். இருளில் கல்லென்றும் முள்ளென்றும் அறியாமல் கால் புண்படக் குழிகளிலும் மேடுகளிலும் இடறி வீழ்ந்து அலைந்து திரிந்து நிலைகுலைந்தார்கள். முட்செடிகள் வேட்டிகளையும் தலைமயிரையும் பற்றி யிழுத்து முகத்திலும் உடலிலும் கீறு காயங்களை உண்டாக்கின. அப்பொழுது குன்றுடையான் அகப்பட்டிருந்தால் அவனை உயிரோடே கொன்றிருப்பார்கள். நல்லவேளை, அவன் கிடைக்கவில்லை! பல இடங்களில் தேடிப்பார்த்தும் மாடுகளைக்காணாமல் குன்றுடையானை வாய்க்குவந்தபடி திட்டிக்கொண்டு சுற்றித்திரிகையில் ஆலமரத்தடியில் மாடுகளைக் காணவே, அவர்களுக்குப் போன உயிர் மீண்டும் வந்தது. இனிக் குன்றுடையான் வந்தாலும் ஒன்றுதான், வராவிட்டாலும் ஒன்றுதான், என்று சொல்லி நகைத்து, மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டைநோக்கிப் புறப்பட்டார்கள்.

இவர்கள் போகும் வழியிலே, சீங்கிமுட் புதரிற் படுத்திருந்த குன்றுடையானுக்கு அப்பொழுதுதான் களைப்பு நீங்கிற்று. அவன் கண்விழித்துத் தானிருக்கும் இடத்தையும் அறிந்துகொள்ளமாட்டாதவனாகச் சிதறிய அறிவை ஒருவழிப்படுத்தித் தன் பழைய நிலையை நினைவுக்குக் கொண்டுவரும்பொழுது, பங்காளிகள் மாடுகளை ஓட்டிப்போகும் அரவங் கேட்டு எழுந்திருக்கஇயலாமல்; 'யாரையாபோகிறவர்' என்று தாழ்ந்த குரலில் கேட்டான். இக்குரலைக் கேட்டதும் பங்காளிகள் ஓடிவந்து குன்றுடையானைக் கண்டு, அவன் மயிரைப்பற்றிச் சரசரவென வெளியே இழுத்து, முகத்தில் அறைந்து, முதுகில் குத்திக் காலாலுதைத்தார்கள். பிடரியின்மேல் கைவைத்து 'நட' என்று சொல்லி உந்தினார்கள்.

இவ்வாறாகக் குன்றுடையானையும் மாடுகளையும் நடத்திக்கொண்டு பங்காளிகள் வீடு அடைந்து, மனைவியர்களும் தாங்களுமாகச் சேர்ந்து குன்றுடையானை மற்றொருமுறை குத்திப்புடைத்து, 'சீ! நாயே, இனி நீ இங்கிருக்கவேண்டாம்; போ வீட்டை விட்டு' என்று சொல்லிக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவை யடைத்துக்கொண்டார்கள்.

குன்றுடையான் தள்ளுண்டு மல்லாந்து வீழ்ந்து, முழங்கைகளை யூன்றித் தடுமாறி யெழுந்திருந்து, தன் பக்கத்தில் வீழ்ந்துகிடந்த கம்பளியையும் கவைக்கோலையும் எடுத்துக்கொண்டு தள்ளாடி நடந்து வாசலைக் கடந்து, அங்கிருந்து கிழக்கேபோகும் பாதையில் வழிக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டான். அப்பொழுது முதற்கோழி கூவிற்று.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[36-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 1. களம் 2.

ப்ரூடஸ்:—விரும்புகின்றே னல்லேன், காஸ்ஸியஸ். எனினும் அவன்பால் நனிமிக நேயமுள்ளேன்—இதுகிடக்க, இந்நேரம் எற்றுக்கு நீயென்னை நிறுத்திக்கொள்கின்றாய்? எனக்குப் புகட்டுவான் நீ விழைகின்றது யாது (1) அது பொதுநலத்தைச் சார்ந்த எதுவாயிருப்பினும், பெருமையை ஒரு கண்ணிலும் மற்றதில் மரணத்தையும் வை; அவ்விரண்டையும் யான் ஏதும் பேதமின்றி எதிர்நோக்குவேன். மற்று, மரணத்திற் கஞ்சுவதனிலும் பெருமையின் பெயரிற்கு யான் அதிகம் ஆசை கொள்வேனேல் தெய்வங்கள் என்னைச் செலுத்துமாறு செலுத்தட்டும் (2).

காஸ்ஸியஸ்:—உன் வடிவத்தினை நான் எவ்வளவு நன்றாக அறிவேனோ அப்படியே ப்ரூடஸ், இவ்வுயர்குணம் உன்னிடத்தில் இருப்பதையு மறிவேன். நன்று, நானுக் குரைக்கவரும் கதையின் பொருளும் பெருமையே (3). இவ்வாழ்க்கையைப் பற்றி நீயும் மற்றவர்களும் என்ன நினைக்கின்றீர்களோ, என்னாற் சொல்லஇயலாது. எனினும், என்னைப் பொறுத்தமட்டில், எனக்கே நான் வெருவியிருக்க உயிர்வாழ்வதனிலும் யான் இல்லாமையே மேல் என மதிக்கின்றேன் (4) நான் ஸீஸரைப் போன்றே எல்லாச் சுதந்தரங்களுடனும் பிறந்தேன்; நீயும் அப்படியே; நாமிருவரும் அவனைபோல் உண்டு வளர்ந்தோம்; அவனளவு மாரிக்குளிரை நாம் இருவருந் தாங்கவல்லோம். ஏன்! முன்னொருபோது, காற்றுங் குளிரும் மிகுந்தஒருநாள், கொந்தளித்த டைபர் தன்கரையொடு பொருதிருக்க, ஸீஸர் என்னை நோக்கி, "கதங்கொண்ட இவ்வெள்ளத்தில், காஸ்ஸியஸ், என்னோடு குதித்து அதோ அவ்விடத்திற்கு நீந்தத் துணிவாயோ" என்றனன்—என்றவளவில், உடைகள் முழுவதும் தரித்திருந்தேனாயினும், நான் குதித்து அவனைத் தொடருமாறு கூறினேன். அப்படியே அவனும் செய்தான் புனலோ கனைத்தது. நாங்களும் இகலுடைய இதயமுடன் (5) அதனைப் பிளந்துந் தடுத்தும் எங்கள் செழித்த தசைவலி கொண்டு மோதினோம். எனினும் குறித்த இடத்தைச் சேர்வதன்முன், "என்னைக் காவாய், காஸ்ஸியஸ், இல்லையேல் முழுகிப்போவேன்" என்று ஸீஸர் கதறினான். நமது பெரிய முன்னோன் இனியஸ், ட்ராயின் தீயினின்று முதியோன் ஆன்கைஸஸைச் சுமந்ததுபோல, டைபரின் அலைகளிலிருந்து நான் களைத்தயர்ந்த ஸீஸரைச் சுமந்து போந்தேன் (6): இந்தமனிதன்தான் இப்பொழுது ஒரு தெய்வமா யிருக்கின்றான்; காஸ்ஸியஸோ கடைகெட்ட பிராணியாய், ஸீஸர் பராமுகமாய் அவன்பக்கந் தலையை அசைத்தாலும், தன் உடலை

(1) புகட்டுவான் - எனக்குத் தெரிவிப்பதற்கு நீ விரும்புகின்ற விஷயம் என்ன, என்று கேட்குமாற்றால் காஸ்ஸியஸின் கருத்தை, முன்னரேஊகித்துள்ள ப்ரூடஸ், சொல்லுமாறு துணிவு தந்து தூண்டுகின்றான். 'சிரஞ்சீவி ஸீஸர்' என்று காஸ்ஸியஸ் வஞ்சப்புகழ்ச்சியாய்ச் சொன்னது ப்ரூடஸிற்குத் துணிவளித்ததுபோல், 'அஞ்சுகின்றேன்' என்றும், "விரும்புகின்றே னல்லேன்" என்றும் இவன் இயம்பியது காஸ்ஸியஸிற்குத் துணிவளித்திருக்க வேண்டும். எனினும் 'அவன்பால் நனிமிக நேயமுள்ளேன்' என்று தெரிவித்தபின் காஸ்ஸியஸ் தன் தீய கருத்தை வெளியாக்கக் கூசினவனாய் நின்றிருத்தல் வேண்டும். இதுகண்ட ப்ரூடஸ் அவனுக்கு இச்சொற்களால் உறுதியளிககவேண்டியதாயிற்று.

(2) இவ்வாக்கியங்களின் பொருள் முதனூலிற்போலவே இம் மொழிபெயர்ப்பிலும் சிறிது மயங்கவேண்டியிருக்கின்றது. பெருமை என்பது இங்கு, செல்வம் செல்வாக்கு முதலியவைகளால் எய்தும் உயர்நிலையையேனும், அல்லது தீவினை யஞ்சுகின்ற மானத்தையேனுங் குறிக்கலாம். அல்லது, முதல்வந்த 'பெருமை' பின்னைய பொருளையும், மற்றது முன்னைய பொருளையும், ஏற்கலாம். இது எவ்வாறாயினும் "இறப்பதானாலும் நான் அஞ்சாமல் பொதுநலத்திற் குரியவைகளைச் செய்யச் சித்தமா யிருக்கின்றேன். ஆதலின், நீ சொல்ல நினைப்பதைச் சொல்" என்பது இதன் பொருளெனக் கொள்ளலாம். கலங்கிய உள்ளமுடையவனா யிருக்கின்ற ப்ரூட்ஸின் உரைகளும் தெளிவின்றி வருதல் இயற்கையே.

(3) நானு மிப்பொழுது உன்னிடத்தில் பெருமையைப் பற்றியே பேச நினைத்திருக்கிறேன்-

(4) எதன்பொருட்டுத் தன்னையே தான் அஞ்சுகின்றான் என்பதைக் காஸ்ஸியஸ் வெளிப்படையாய்ச்சொல்லவில்லை. "நான் கையாளும் பொறுமையை இழந்து, ஸீஸரை என்நாள் என்ன செய்துவிடுவேனோ, என்று அஞ்சுகின்றேன்" என்பது அவன் கருத்தா யிருக்கலாமெனப் பின்வரும் வாக்கியங்களிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம்.

(5) இகலுடைய இதயம் என்பது வெள்ளத்தைப் பகைப்பதைக் குறிப்பதோடு, இப் பந்தயத்தில் வெல்லவேணடுமென்று அவ்விருவரும் தனித்தனி எண்ணிய 'போட்டி'யையும் குறிக்கும்.

(6) **இனியஸ்** என்பவன் ஒரு வீரன். அன்கைஸஸ் என்பவன் அவன் தந்தை. **ட்ராய்** என்னும் நகரத்தின் அரசனாகிய **ப்ரையாம்** என்பவனுக்கு உறவினன். அவ்வரசனது புதல்வர்களில் ஒருவனாகிய **பாரிஸ்** என்பவன் கிரீக் தேயத்து அரசன் **மெனிலியஸ்** என்பவனுடைய மனைவி **ஹெலன்** என்பவளைக் காதலித்துத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்துவிடவே, கிரேக்கர்கள் பெரும் படை திரட்டிவந்து ட்ராய்நகரத்தை முற்றுகையிட்டு எரியூட்டினார். இந்தச் சரித்திரம், உலகத்துக் கவிகளுக்கெல்லாம் முதல்தாதை என அழைக்கப்படும் கிரீக் கவி **ஹோமர்** என்பவர் எழுதிய **'இல்லியட்'** என்னும் பெருங்காவியத்தில் அடங்கியிருக்கின்றது. அந்தத் தீயினின்று தன் வயோதிகத் தந்தை அன்கைஸஸை, இனியஸ் தோளிற் சுமந்து காப்பாற்றிப் போந்து பிறகு பலவிடங்களுக்குச் சென்று அரிய கருமங்கள் பல ஆற்றி இறுதியில் இட்டலி தேயத்தில் தங்கிவிட்ட வரலாற்றை லாட்டின் பாஷையின் பெரும் புலவராகிய **வர்ஜில்** என்பவர் தம் **'இனியட்'** என்னும் பெருங்காவியத்தில் கூறி யிருக்

வளைக்கவேண்டும் (7). ஸ்பெய்ன் தேயத்திலிருந்த காலத்தில் அவனுக்குச் சுரம் கண்டது. குளிர்வந்தபோது அவன் எப்படி நடுங்கினுனென்பதை நான் கவனித்தேன்; உண்மையே அது! இந்தக் கடவுள் நடுங்கவே நடுங்கியது பயங்கொண்ட அவனுதடுகள் உதிரத்திற் காற்றுது ஓடின (8). உலகத்தை ஒரு பார்வையால் வெருவுறச் செய்யும் அதே கண் தன் ஒளியை இழந்தன. அவன் மறுகியதை நான் கேட்கவுங் கேட்டேன். ஆகா! தன்னையே கவனித்துத் தன் மொழிகளைப் புத்தகங்களில் எழுதிவைத்துக் கொள்ளும்படி உரோமர்களுக்குக் கட்டளையிட்ட அவன்நாவானது, பாவம், "டிடினியஸ், குடிப்பதற்கு ஏதேனுங் கொடு" என்றோர் நோயாளிப் பெண்போல் கத்தியது. (9) ஏ! தெய்வங்காள், இத்துணை நொய்ய தன்மையனொருவன், இம் மாபெருமுலகம் பிறக்கிட முந்தி இப்படியும் வெற்றிமாலையைத் தானே தனியாய்ச் சூடுவதோ என்னும் வியப்பு என்னைத் திகைக்கச் செய்கின்றது (10)

[வாத்திய முழக்கமும் சனங்கள் ஆரவாரமும் கேட்கின்றன.]

ப்ரூடஸ்:—பின்னுமோர் பெரு முழக்கம்! ஸீஸரின் மீது ஏதோ புதிய பெருமைகள் குவிப்பதற்காகவே இவ்வோகை விளம்பலாகின்றன வென்று நம்புகின்றேன். (11).

காஸ்ஸி.—ஆம், ஐய, ஒடுங்கிய இவ்வுலகை அவன் கலோஸஸ் போல் கால்பரப்பி உகைக்கின்றான் (12); சிறு மாநுடர்களாகிய நாம், அவன் பெரிய கால்களின்கீழ் நுழைந்துநடந்து மானமில்லாக்கல்லறைகளை சேர்வதற்கு வழிபார்த்திருக்கின்றோம். (13) மனிதர் யாதாமொருபோது தம் விதிக்கு அதிகாரிகளாகின்றார். நாம் பணியாட்களாகவே யிருக்கின்ற பிழை இது, அருமைப்புரூடஸ், நம்முடையதேயல்லாமல், நம் கிரங்களின் பிழையன்று. (14) ப்ரூடஸ்-ஸீஸர்! அந்தஸீஸரில் இருப்பதுதான் யாது? அந்தப் பெயர் உனதினும் அதிகமாய் இசைக்கப்பெறுவானேன்! இவ்விரண்டையும் எழுதிப்பார், உன் பெயரும் அதற்கிணையாய நேர்மைத்தே. உச்சரித்துப்பார், அதுபோன்றே இதுவும் வாயிற்பொருந்துகின்றது. நிறுத்துப்பார், அத்துணைப்பாரம் இதற்குமுளது. அவைகளைக் கொண்டு மந்திரஞ் செய், ஸீஸர் எவ்வளவு விரைவில் ஒரு பூதத்தை எழுப்புமோ அவ்வளவு விரைவில் ப்ரூடஸஸும் எழுப்பும். (15). [சனங்கள் ஆரவாரம் கேட்கின்றது.]—எல்லாத் தெயவங்களின் பெயர்களையும் ஒருங்கே வைத்துக் கேட்கின்றேன் (16)-இத்துணைப் பெரியனாய் வளர்ந்திருப்பதற்கு நம் ஸீஸர் இவன் எவ்வுணவு புசிக்கின்றான்? காலமே, நீ பரிபவமடைந்தனை! உரோமாபுரியே, உயர்குலத்தோர் பரம்பரையை நீ இழந்துவிட்டாய். ஒருவனுக் கதிகமானவர்களால் புகழ்பெற்றல்லாமல், பெரும் பிரளயத்திற்குப் பிறகு, கழிந்தகாலம் ஒன்றுதானுண்டோ! (17). உரோமாபுரியைப் பற்றிப் பேசுவோர், அதன் அகன்ற மதில்கள் ஒருவனையே தம்முள் வளைந்துகொண்டிருந்தனவென்று இந்நாள்வரையில் எப்பொழுது இயம்பியிருக்க வல்லவராயினர்? ஒருவனைத்தவிர ஏனையோர் இடமகல வேண்டியிருந்தகின்றார். இந்த இனியஸ் என்பவன்தான் உரோமர் குல முதல்வன்.

(7) காஸ்ஸியஸ் தன்னையே படர்க்கையில் பேசுகின்றான். ஸீஸரைப் பணிந்து வணங்கும்படி தன் கதி யாயிற்றே என்று காஸ்ஸியஸ் வருந்துகின்றான்.

(8) உதடுகள் இரத்தமின்றிவிளர்த்தன என்பதுஇதன் பொருள். உதடுகள் ஓடவில்லை. இரத்தக்களத்திற் கஞ்சி ஓடும் படைஞனைப்போல், உதடுகளும் இரத்தத்தைவிட்டு ஓடின என்னுங் கருத்தைக் காஸ்ஸியஸ் இவ்வண்ணம் சுருக்கிச் சொல்கிறான்.

(9) சுரத்தால் வருந்தியபோது ஸீஸர் தன் அருகிலிருந்த டிடினியஸ் என்பவனைத் தாகத்திற்கு நீர்கேட்ட சொற்கள் இவை.

(10) பிறக்கிட-பின்னாக. 'நான் முன், நீ முன்' என்று எல்லோரும் இகலிச் செல்கின்ற இவ் வாழ்க்கைப்பந்தையத்தில், மெய்வலியேனும் மனவலியேனும் இல்லாத இந்த ஸீஸர் நம்மனோரை இவ்வளவுதூரம் பின்விட்டுச் சென்று, யாதினும் உயர்ந்த சர்வாதிகாரிப் பதவியைத் தான்மாத்திரம் தனியே அனுபவிக்க நாம் விட்டுவைப்பானேன்—என்பது இதன் கருத்து.

(11) ஓகை விளம்புதல்—கரகோஷம் முதலியவைகள் செய்து தம்முடைய சம்மதத்தையும் உவகையையுந் தெரிவித்தல்.

(12) உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகிய **கலோஸஸ்** என்பது, கிரேக்கர் கடவுள் 'அப்போலோ-வின் உருவச்சிலை. பித்தளையாற் செய்தது. 105 அடி உயரம். ரோட்ஸ், என்னும் பட்டணத் துறைமுகத்தின் நுழைவாயிலின் இருபுறத்திலும் பாவியகால்களுடன் அது நிறுவப்பெற்றது. பரப்பிய அக்கால்களின் இடைவெளியில் கப்பல்கள் நுழைந்து செல்லக்கூடும். (உகைத்தல்' சவாரி செய்தல்).

(13) கல்லறைகள் = இறந்தபின் புதைக்குமிடம். மானமின்றி நாம் ஸீஸரின் கால்களைப் பணிந்து மாள்வதற்கே கிடக்கின்றோம்—என்பது கருத்து.

(14) எல்லாம் விதியின் பயன் என்று எண்ணலாகாது. விதியையும் வெல்லவல்ல சமயம் ஒவ்வொருவனுக்கும் வாய்க்கும். அதனைக் கைகடக்கவிட்டுவிட்டு நம் கிரகங்களைக் குறைகூறுவது மதியாகுமோ—என்பது இதன் பொருள்.

(15) பேரளவில், ஸீஸருக்கும் ப்ரூடஸிற்கும் ஏற்றந் தாழ்வு யாதுமில்லை என்னக் காஸ்ஸியஸ் பலபடி மொழிகளை வளர்க்கின்றான். தன்னைப்போல் குளிரைத் தாங்கமாட்டான், நீந்தமாட்டான், சுரத்தைப் பொறுக்கமாட்டான், ஆகையால் ஸீஸர் தன்னினுந் தாழ்ந்தவன் என்ற காஸ்ஸியஸ், ப்ரூடஸ்—ஸீஸர், என்னும் பெயர்கள் ஒருபடித்தா யிருப்பதால் அப்பெயருடைய அவ்விருவரும் எவ்வகையிலும் இணையானவர்களே, என்று வாதிப்பது வியத்தற்குரியதன்று.

(16) தெய்வங்களே, நீங்களே சொல்லுங்கள்-என்பது பொருள்.

(17) காஸ்ஸியஸின் காலத்திற்கு 1500வருடங்களுக்கு முன், ஜூபிடர் என்னும் கடவுள், மனிதர் தெய்வபக்தியற்றவராயினர் என்ற கோபத்தால், **தெஸ்ஸிலி** என்னுமிடத்தில் ஒரு பிரளயம் விளைத்தாரென்றும், அதனில் **டீயேகேலியன்** என்பவனும், அவன்மனைவி **பிர்ரா** என்பவளும் தவிர மற்றவரெல்லாம் மாண்டனரென்றும் கூறுவர். அப்பொழுதுதான் இத்தேயம், **டீயேகேலியன்** என்னும் அவ்வொருவனைக் கொண்டே புகழெய்த வேண்டியதாயிற்று. இன்றைக்கோ, மற்றவரெல்லாம் மாய்ந்தவர்க்கே நிகராக, இந்த ஸீஸர் ஒருவனே புகழையெல்லாம் முகந்துகொண்டு நிற்கின்றான். அன்றுமுதல் இன்றுகாறும் இணையாய புகழுடைய பல மனிதர்களால், அவ்வக்காலமும் இடமும் திகழ்ந்திருக்க, இப்பொழுது மாத்திரம்

லால் இவ்விரோமாபுரி அகலிட முடையதென் பது தக்கதேயோ! (18) நிரந்தரம் பேயேபோல் மன்னனாட்சியையும் இவ்வுரோமாபுரியில் பொறுப் பான் ஒரு ப்ரூடஸ் ஒருகாலத்தில் இருந்தா னென்று நம் தந்தையர் கூற நீயும் நானும் கேட் டிருக்கின்றோம். (19)

ப்ரூடஸ்:—என்பால் நீ அன்புடையை யாதலே யான் யாதும் அயிர்த்திலேன். எதற் கென்னைத் தூண்டு கின்றனை யென்பதையும் ஒருவாறு குறிக்கொள் கின்றேன். இதனையும் இக்காலங்களையும் பற்றி நான் எவ்வாறு நினைத்துளேன் என்பதைப் பின்னர் உரைப்பேன். பரிவினோடும் நானுன்னை வேண்டிக் கொள்ளலாமெனின், தற்போது இதன்மேல் நான் அசைக்கப்பெற விரும்பவில்லை. (20) நீ சொல்லி யதைச் சிந்திப்பேன்; இன்னும் நீ சொல்லவேண் டியவைகளைப் பொறுமையுடன் கேட்பேன்: இது வனைய பெரியவிடயங்களைக் கேட்கவும் பதிலுரைக் கவும் தக்க அமயத்தை நாடுவேன். அதுவரையில், என் பெருந்தகை நண்ப, இதனை மென்றுகொண் டிருப்பாயாக (21); இக்காலம் நம்மீது சுமத்தக் கூடிய கடிய நிலைகளில், ரோம்நகர மகனென்ற பேரால் தன்னைப் பாராட்டிக்கொள்வதிலும் ப்ரூ டஸ் ஓர் கிராமவாசியா யிருத்தற்கே விரும்பு வான். (22)

காஸ்ஸி:—நொய்ய என் சொற்கள் ப்ரூடஸிலிருந்து இவ்வளவேனும் தீப்பொறி தோற்றுவித்ததற்கு உவகை எய்துகின்றேன்.

ப்ரூடஸ்:—விளையாட்டுப் பந்தயங்கள் முடிந்தன. ஸீஸர் திரும்புகின்றான்.

காஸ்ஸி:—அவர்கள் நம்மைக் கடந்துசெல்லும்போது காஸ்க்காவின் அங்கியைப்பற்றிப் பறித்துக்கொள். இன்றைக்குக் கருத்துட் கொள்ளத்தக்க யாது நிகழ்ந்ததென்பதை அவன், தன் வழக்கப்படி, புளிக்கப்புளிக்கச் சொல்வான். (23)

[ஸீஸரும் அவன் பரிவாரத்தினரும் மறுபடி வருகின்றனர்.]

ஒருவனே எல்லாப் புகழையும் விழுங்கிக்கொள்வது ஏன் —என்பது இதன் பொருள்.

(18) இடமகல்—அகலிடம், சிலேடை. (முதனூலில் சிலேடையாய் வந்த சொற்கள் வேறு.) இடமகல்தல்— இடத்தைவிட்டுப் போதல், அகலிடம்-விசாலமான இடம்.

(19) இங்குக் குறித்த ப்ரூடஸ், நம் ப்ரூடஸின் மூதா தை எனக்கருதப்படுகின்ற ஜூனியஸ் ப்ரூடஸ் என்பவன். அவன், அற்றைக்கு நானூற்றைம்பது வருடங்களுக்கு முன் ரோமாபுரியில் அரசாண்டிருந்த அரசனை அடித் துத் துரத்திவிட்டுக் குடியரசு முறைநிறுவி அதனில் தானே முதல் ஆட்சித்தலைவன் Consul ஆயினான். அர சன் ஆட்சி பொறுக்காமல் ஜனஆட்சி ஏற்படுத்திய அவன் மரபில் வந்த நீ இப்பொழுது சும்மாவிருக்கலாமாவென்று ப்ரூடஸைத் தூண்டியவாறும் இது. "பேயேபோல் மன் னவன் ஆட்சியைப் பொறுப்பான் ஒரு ப்ரூடஸ்" என்பது, பேய் ஆள்வதென்றால் எவ்வளவு பொறுப்பானோ, அவ் வளவுதான் அரசன் ஆள்வதென்றாலும் பொறுத்திருப் பான்—அதாவது, இரண்டையும் ஒரு படித்தாய்க் கருது வதால் அவ்விரண்டையும் பொறுக்கமாட்டான் எனப் பொருள்படும்.

(20) உன்னை வேண்டிக்கொள்கின்றேன். இதன்மேல் இப்பொழுது என் மனத்தைச் சஞ்சலப்படுத்தாதே, என் பது பொருள்.

(21) வாயில் ஒன்றினை மென்றுமென்று அதன் சுவை யைச் சோதித்தறிவதுபோல், நான் உரைக்கின்ற இவ் வாசகத்தைச் சிந்தித்துச் சிந்தித்து அதன் பொருளைத் தேர்ந்துகொள்.

(22) இப் பெருநகரின் ஒருமகனாய்ப் பிறந்த நான், இக்காலத்தில் உண்டாகும் இன்னல்களைக் கண்டிருந் தும் சும்மாவிருத்தல் ஆகாது; இதனைத் தீர்ப்பதும் எளிய தன்று. ஆதலின், ஏதேனும் ஒரு கிராமத்தில் பிறந்து ஒன்றுமறியாதவனா யிருப்பேனேல், அல்லல் இல்லாம லிருக்குமே என்று நான் எண்ணுகின்றேன்—என்பது பொருள்.

(23) மரத்தினின்று காயைக் காம்பினால் பறிப்பது போல், கூட்டத்தினின்று காஸ்க்காவை அவன் ஆடை யைப்பற்றி இழுத்து நிறுத்திக்கொள்—என்பது பொருள். இவன் புளியங்காய் போல் புளிக்கப் பேசுவானே யன்றி இனிக்கப் பேசமாட்டான்.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்—29. தருக்கம்

[27-வது பக்கத் தொடர்ச்சி]

(V) ஜடபதார்த்த வகை.

பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படுவன யாவும் ஜட பதார்த்தமே. சித்துப்பொருளாக மனிதனைக் காணும்போதும், அவன் தேகத்தையும் இயக்கத்தை யும் காண்பதால், அவன் அறிவுப்பொருளென்று அநுமானிக்கின்றோமேயன்றிக் காணும் பண்டமாகிய ஸ்தூலசரீரம் சடமேயல்லால் வேறில்லை. ஆகையினால் பொருள்களை நம் முன்னோர் பூதங்களின் பகுதியாய் ஐவகையாய்ப் பிரித்தனர். அவையாவன:—

(1) ஆகாயம்:-இது ஏகமாய், பகுக்க முடியாததாய் எங்கும் நிறைந்த ஓரே பொருள். சட பதார்த்தங் களில், இக்குணம் வாய்ந்தது இது ஒன்றே. இதன்றி யும் ஏனைய பொருள்கள்போல் மற்றப்பூதங்களிலிருக் கும் இடத்தில் அதே காலத்தில் இருக்கக்கூடியது. கல்லொன்று இருக்குமாயின், நீரும் அதே காலத்தில் அதேஇடத்தில் இருக்கலாகாது. ஆயினும் ஆகாயமா னது கல்லின் ஒவ்வொரு அணுவின் பாகங்களிலும் நிறைந்திருக்கும். இது கடவுள் தன்மைபோல் * எங் கும் நிறைந்ததோர் பொருளாம். (இதை ஆங்கிலத்தில் Ether என்று கூறுவர்)

* முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே
முதலாகி நடுவாகி முடிவா னானே
கண்டத்தின் வெண்மருப்பின் காறை யானே
கதநாகங் கொண்டாட்டும் காட்சி யானே
பிண்டத்தி னியற்கைக்கோர் பெற்றி யானே
பெருநிலநீர் தீவளியா காசமாகி
யண்டத்துக் கப்பலா யிப்பா லானே
யவனாகி லதிகைவீ ரட்டனாரே
திருவதிகைவீரட்டானம்-அடையாளத் திருத்தாண்டகம் 6.

(2) வாயு:-காற்றின்வகை இரண்டு. வீசுவது ஒன்று வீசாதது மற்றொன்று. வீசுவதை நாம் பரிசஉணர்ச்சியால் அறிகின்றோம். அது வீசாதிருப்பின், இயக்கம் கொடுத்தோ அல்லது வேறு வகையிலோ, அதன் உண்மை யறிகின்றோம். வீசுங்காற்று இருவகையாம். அவை மந்தமாருதம் என்றும் சண்டமாருதம் என்றும் கூறப்படும். அவற்றுள் மந்தமாருதம், இன்பம்* தரும் தென்றல் முதலியன. சண்டமாருதமாவது சுழுவளி முதலிய துன்பம் பயக்கும் காற்று.

காற்றின் தன்மையாவது எளிதில்சுருங்கவும், பெருகவும், பரவும், கூடியது. அதனால், சக்திபெற்றபோது மண், நீர், தீ என்னும் பூதங்கள் மூன்றையும் கலக்கவும் அழிக்கவும் வெகுதூரத்தில் களையவும் வன்மை பெற்றதாம். இதை உவமானம் செய்து, அப்பர்.

காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு வண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
வாற்ற னையடி யேன்மறந் துய்வனோ?
திருவண்ணாமலை—திருக்குறுந்தொகை 4.

காற்றி னுங்கடி தாகி நடப்பதோர்
ஏற்றி னும்மிசைந் தேறுவ ரன்பொடு
நீற்றி னையணி வர்நினை வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர் புத்தூரரே.
திரு அரசிற்கரைப்புத்தூர்—திருக்குறுந்தொகை 8.

என்றும் பாடுவது காண்க. காற்று இயற்கையாய் ஓரிடத்தில் நிலைபெற்று நிற்பதன்று.

(3) அக்கினி—"தீத் தெறுதலைக் குணமாகவுடைத்து" என்பர் அடியார்க்குநல்லார். இதன் சுபாவம் உஷ்ணம். உருக்கப்பட்டு வெளிவரும் உலோகங்களையெல்லாம், தீயின் பகுதியிலே நம் முன்னோர் கொள்வர். பொன், வெள்ளி முதலியனவற்றைப் பிரிதிவி ஆகிய மண்ணின் பகுதியாகக் கொள்ளார். தீ மூன்று வகையாய்க் காணப்படும். நீறுபூத்த நெருப்பாய் வெளியிற் காணப்படாது உள்ளே கவிந்து நிற்பது. செந்தழலாய்ச் சிவந்த நிறத்துடன் சூட்டை வீசுவது. இவ்விரண்டும் சாதாரண மானவை. அப்பர் அவற்றைப் பரமனுக்கு ஒப்பிடுவார்:—

செந்தழலுருவர் போலுஞ் சினவிடை
யுடையார் போலும்
வெந்தவெண் ணீறுகொண்டு மெய்க்கணிந்
திடுவர் போலும்
மந்தமாம் பொழிற்பழனை மல்கிய
வள்ளல் போலும்
அந்தமி லடிகள்போலு மாலங்காட்
டடிக ளாரே.
திருவாலங்காடு—திருநேரிசை 2.

மூன்றுவதுவகைத் தீயானது கர்ண அரியதாய் மேலெழுந்து செல்லும் தன்மையதாய் அதிக உஷ்ணத்தை உடையதாம். இதில் சிறிது நீரின் சம்பந்தப்பட்ட வஸ்துக்கள் பட்டால் புகையைக் கக்கியெரியும். இத்தகைய புகையை அழலுமிழ் புகையென்பார். ஆக இம் மூன்றுவகைத் தீயும் நமது அந்தணர்கள் ஓம்பினரென்பது அப்பர் தேவாரத்தில் காணலாம்:—

ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
உயர் புகழார் ஓமமாம் புலியூர் மன்னும்
தீதிறிரு வடதளியெஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.
திருவோமாம்புலியூர்—திருத்தாண்டகம் 2.

(4) நீர்:- நீர் நெகிழ்தலாகிய குணத்தையுடையது. அது நால்வகையாகக் காணப்படும். அவையாவன:—

(i) கல்நீர். அதாவது உலர்ந்திருக்கும் பதார்த்தங்களில் உள்ளே தங்கும் நீர். வயிரம் கெம்பு முதலிய கற்களில்ஒளிதருவது அவற்றினுள்ளநீராலேயே. இதைப் பளிங்குக்குள் நீர்(Water of crystallisation) என மேல்நாட்டு இயற்கை அறிவியல் நூலாசிரியர் கூறுவர். இந் நீர், அப்பதார்த்தத்தை உடைத்தாலும் பொடிசெய்தாலும் வெளிவராது. பெருந்தீயால் அப்பதார்த்தத்தின் ஸ்தூல அணுக்களின் கட்டடஅழிவு செய்வோமாகின், இந்நீரை வெளியே கொண்டுவரலாகும். இவ்வகை நீரை யெண்ணியோ அப்பர்,

புனலொப் பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப் பானை விண்ணோரு மறிகிலார்
அனலொப் பானை யாத்துறை மேவிய
கனலொப் பானைக் கண்டீர்நாந் தொழுவதே.
திருநெல்வாயிலரத்துறை—திருக்குறுந்தொகை 7.

(ii) உவர் நீர்—அதாவது உப்புநீர். நிலத்தில் பல இடங்களில் உப்பு நீர் காணப்படினும் கடலின் உப்பு சிறந்த குணமுடைய தாகையால் உப்பு நீரென்பதைக் கடல்நீராக எண்ணுவது சிறப்பாம். தேகவினை யாவும் ஒழிக்கத் தக்கது சாதாரண உப்பு (Sodium chloride) ஆகும். சமுத்திரத்தினருகில்வசித்தலே ஒருவகைச் சிறப்பெனக் காட்டவோ அப்பர்,

கடல்க ழிதழி நாகைக்கா ரோணன்றன்
வடவ ரையெடுத் தார்த்த வரக்கனை
அடர வூன்றிய பாத மணைதரத்
தொடர வஞ்சுந் துயக்கறுங் காலனே.
திருநாகைக் காரோணம்—திருக்குறுந்தொகை 10.

என்னுமப் பாசுரத்தின் முடிவினைத் தொந்தமெனத் தொடர வைத்தார் போலும்.

(iii) விண்ணீர்—இது பரிசுத்தமான ஆவியாகிய நீர். இது தூசுகளால் திரண்டாலே வீழ்நீராய் மழையெனப்படும். ஆகாயகங்கை சிவபெருமான் திருமுடியிலமைந்ததையும் நீர்த்திர ளென்பர், அப்பர்:—

நீர்த்திரளை நீள்சடைமே னிறைவித்தானை
நிலமருவி நீரோடக் கண்டான் றன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் றன்னைப்
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் றன்னைக்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.
திருவாலவாய்த் திருத்தாண்டகம் 3.

(iv) நன்னீர் †:-இதன் தோற்றம் அடியிற்கண்ட அப்பர் பாசுரங்களில செவ்வனே விளங்கும்:—

* மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைம் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
தனித் திருக்குறுந்தொகை 1.

† தொண்டனேன் பட்டதென்னே தூயகா விரியினன்னீர்
கொண்டிருக் கோதி யாட்டிக்குங்குமக் குழம்பு சாத்தி
யிண்டைகொண் டேற நூக்கி யீசனை யெம்பி ரானைக்
கண்டனைக் கண்டி ராதே காலத்தைக் கழித்த வாறே.
தனித் திருநேரிசை - 1.

மாசில்ஒள்வாள்போல்மறியு மணிநீர்த்திரைத்தொகுதி
ஊசலே யாடியங் கொண்சிறை யன்ன முறங்கலுற்றல்
பாசறை நீலம் பருகியவண்டு பண்பாடல் கண்டு
வீசுங்கெடில வடகரைத்தே யெந்தை வீரட்டமே.

திருவதிகை வீரட்டானம் - திருவிருத்தம் 1.

மீனுடைத் தண்புனல் வீரட்டரே
நும்மை வேண்டுகின்ற
தியானுடைச் சில்குறை யொன்றுள
தானறுந் தண்ணொருக்கின்
தேனுடைக் கொன்றைச் சடையுடைக்
கங்கைத் திரைதவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப்
போதும் குறிக்கொண்மினே. ஷை 4.

இங்ஙனே ஒவ்வொரு நாட்டிற்கும் மூவகை வளங்களில் ஒன்றைத் தருவதாகும்.

(v) மண்:- இது செறிதலைக் குணமாகப் பெற்றது. இது ஐந்து வகையாம். அவை, களிமண் செம்மண், கருமண்†, உவர்மண், மணல் என்பன. "துவர், வரி, வளி, பொருத்தன்" முதலியன நிலக்குற்றங்க ளாகும். அவையே களித்தரை, உவர்த்தரை ஈளைத்தரை பொல்லாச் சாம்பற்றரை பொடித்தரையென்று சொல்லப்படும்.

† கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய்க் காலாறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளு மாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீருமாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தழக னின்ற வாறே.
நின்ற திருத்தாண்டகம் 3.

தரையானது பலவகையிற் பரிணமித்துப்பல்லுயிர்களுக்கு இடங்கொடுக்கும். இதினின்றே மேலெழு உயிர்களுக்குத் தக்க ஏணிபோன்ற அமைப்பு முண்டு. அதை உருவகப் படுத்துவதுபோல் அப்பர்,

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே.
நின்ற திருத்தாண்டகம் 2.

என்பர்.

மண்முதல் ஐந்து பூதங்களும் பெரு வெளியினின்று ஆகாயமாய்க் காற்றாய்த் தீயாய் நீராய் நிலனானதுபோல், நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் இவை புற்கலமாய் அறிவுசம்பந்தப்பட்டு, அஞ்ஞானச் செய்கைகளுடைய இந்திரியங்களாய் மனமாய் அந்தக்கரணமாய் முதலில் புல்லறிவுடன் காணப்படும். இதனை:-

பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாதமுத லாமெழுத்து நாலாகி—வீதி
வருவரத்தாற் றானத்தாற் வந்து வெளிப்பட்
டிருவரத்தாற் றேற்ற மிசைக்கு

என்பனாலறிக.

[குறிப்பு—புற்கலம்-உடம்பு]

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதடுத்துத்—துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தா
லவைமுதற் புற்கல மாம்.

என்பதும் காண்க.

—*=*—

கம்பராமாயணம்

[37-வது பக்கத் தொடர்ச்சி]

ஆரணிய காண்டம்—1. விராதன் வதைப் படலம்.

உறங்கா துறங்கியே வாராது வரவல்லோன்.

இன்னபடி யாவும் விளையாட்டாய்முடிந்த இவ் விராதன் போர் வான்மீகத்தில் மாபெரும் வினையாய்த் துயரத்தோடும் முயற்சியோடும் வருந்தப்பெற்றது. அத்துயரத்தினால் இராமன் சிந்தைதிகைத்துச் சொல்லிய மொழிகள் கம்பர் நூலின் அமைப்பிற் கிணங்காவாதலின் இங்கு இடம்பெற்றில. சீதையை விராதன் கவர்ந்தகன்றபோது இராமன், "நம்மை உத்தேசித்துக் கைகேயி கேட்ட வரத்தின் பிரயோஜனம் இன்று அவளுக்குக் கைகூடிவிட்டது" என்று பழித்ததும், இலக்குவன், "இராச்சிய விஷயமாய் நான் பரதனிடங் கொண்டிருக்கும் கோபத்தை இவ்விராதன்மேல் செலுத்துகின்றேன்" என்று துணிந்ததும் மாணா மொழிகளாதலின் அவை வடநூலினின்று பெயர்ந்து வந்து கம்பர்நூலினுள் மறுபிறப் பெடுக்கவில்லை. அங்ஙனமே, இராமஇலக்குமணர்களை விராதன் தூக்கிப் போவது கண்ட சீதை, "இராமரை இலக்குமணருடன் எடுத்தோடுகின்றானே ஒரு பயங்கரமான அரக்கன்! இனி என்னைச் செந்நாய்களோ, அல்லது புலியோ, அல்லது சிறுத்தையோ புசித்துவிடப்போகின்றன" எனப் பயந்து பிறகு "அரக்கருள் உத்தமனே, உனக்கு நமஸ்காரம்; அவர்களை விட்டுவிட்டு என்னை எடுத்துக்கொண்டு போ" என்றதில், தான் புலியின் வாய்க் ககப்படாமல் அரக்கன் தோளிலேனும் ஏறித் தப்பநினைத்தவள்போல் தோன்றுவதால், கம்பர், அச்சொற்களை மாற்றிப்பயின்ற கலைத்திறமும் கருதற்கினியதே யாம்.

அருளுருவாய பரம்பொருளின் திருவடித் தலந்தீண்டலும், கங்குல் பூசிவரு கலிகாலமென்ன வந்த நிருதன் பெறற்கரிய மெய்யுணர்வு பெற்றனன். பெற்றவளவில் பண்டைய தன் திவ்விய வடிவங்கொண்டு இராமபிரானைத் தத்துவங்கள் செறிந்த சொற்களால் துதிக்கத் தலைப்படுகின்றான். பழிப்பான்போல் பழிச்சுகின்ற இப்பாசுரங்கள் பரம இரகசியங்களின் அருமையைத் தெரிவித்து, உணர்விற் ககப்பட்டதெனஅணுகியும், அறிவினால் ஆராயுங்கால் அகன்றும் விளையாட்டயர்கின்ற முழுமுதற் பொருளின தழகினை உள்ளங் கனியத் தெளிவிக்கின்றன.

தயரத னெருடைந்தன் திருவடி தீண்டலால் தனத னிட்ட சாபந்தீர்ந்த பண்டைய தன் தும்புருவின் உருப்பெற்று, அறிவும் பக்தியும் ஒருங்கே சிறக்கும் பெற்றியனாய் அவ்விராதன்,

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
ஓதங்கொள் கடலன்றி யொன்றினோ டொன்றொவ்வா
பூதங்க டொறுமுறைந்தா லவையுன்னைப் பொறுக்குமோ

[வேதங்களால் துதிக்கப் பெறுகின்றனவும், உலகங்க ளெல்லாம் (முன் திரிவிக்கிரமாவதாரத்தில்) விரிந்தனவும் ஆகிய உன் பாதங்கள் இவைதான் என்றால், எல்லாமாய் எங்குமாய்த் தோன்றும் உன் உருவங்களின் தன்மை யாதோ! குளிர்ச்சியும் அலையும் உடைய கடலில் மாத்திர மன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வா, பிரதிவி தேயு வாயு ஆகாயம் ஆகிய மற்றப் பூதங்கள் ஒவ்வொன்றிலும் நீயே தங்கியிருந்தால், அப்பூதங்கள் உன்னைத் தாங்கக்கூடுமோ]

என்று முதலில் பாதங்களைப்பற்றி உதிக்கின்ற ஞானத் தோடுறழ்கின்ற ஐயத்தினையும் ஒருங்கே உரைக்கலுற் றான். "பிரபஞ்சமனைத்தையுந்தாங்குகின்ற பரம, மீண் டும் பஞ்சபூதங்களாலாகிய அப்பிரபஞ்சம் உன்னைத் தாங்குகின்றதென்ப தெங்ஙனம்" என்னுங் கேள்வி எழுவதியற்கையே. "இவ்வாறு நீ தங்குமிடம் யா தென்று தேடுமளவில், நீதான் யாரென்ற ஐயம் விளை கின்றதே. மற்று,

கடுத்தகராங் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசையனைத்தினுஞ்சென் றொலிகொள்ளவுறுதுயரா
லடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேயென்[று]
றெடுத்தொருவாரண மழைப்ப நீபோவன் றேனென்று

[கோபங்கொண்ட முதலை பற்றிக்கொள்ள, உண்டான துன்பத்தால், உடல்நடுங்கி, துதிக்கையைத் தூக்கி, சூழ்ந்த திசைகளெல்லாம் சென்று ஒலிக்கும்படி, யாருக்கும் உரிய பெரிய ஒப்பற்ற மூலப் பரம்பொருளே, என்று ஒரு யானை குரலெடுத்தழைத்தப்போது அதற்கு ஏனென்றவன் நீயோ]

என வினவுகின்றான். ஐம்பெரும் பூதங்களைத் தாங்கு பவனும் அவைகளால் தாங்கப்பெறுபவனும் அவனே யாயின், அப்பூதங்களாலாய நிகிலப்பொருள்கள் அவ னுக்கு அகத்தவோ புறத்தவோ! எனின், முதலை யென் றும் யானையென்றும் வேறு வேறாகி, அம்முதலை யானையை நலிவதென நிகழ்த்திப் பின் அம்முதலையை அழித்து யானையை அளிக்க ஏனென்று வந்த மாயம் யாதென்று வினவலாமே யன்றித் தெளியுமாறு எளி யேங்கட் கில்லை.

கஜேந்திரன் மூலப் பேரிட்டு அப் பரம்பொருளை அழைத்தானென்னுமிது மரபிற்குரியவழக்கே."மூலப் பேரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு நீலக்கிரி போல் முன்னின்ற நெடுமாலே" என்று வில்லிபுத்தூ ரரும், "முந்தருளும் வேதமுதலே என அழைப்ப வந் தருளும் செந்தாமரை" எனப் புகழேந்திப் புலவரும், இயம்பினர்.

அக்கர வம்பினைந் தாரய னரிடை யாயிருநா
லக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோ
லக்கர வம்புயன் தான்மூல மென்ப தறிவித்திடா
னக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே

[எலும்பும் பாம்பும் அணிந்த சிவனுக்கும் பிரம்மனுக்கும் இடையேயிருந்துகொண்டு, எட்டெழுத்துடையவனும் வாச னைபொருந்திய தாமரைமலரிலிருக்கும் இலக்குமிநாயகனும், சிவந்த அழகிய கரங்கள் தாமரையை ஒத்தவனுமாகிய திரு வரங்கன் தான் மூலம் என்பதைத் தெரிவிக்காமலிருந்தான். அந்தத் திருட்டுத்தனத்தை, அழகிய இப்பூமியின்மேல் ஒரு யானையே வெளியாக்கிவிட்டது]

என்று பிள்ளைபெருமாள் ஐயங்காரும், வாரணம் 'ஆதி மூலமே' என்றழைத்ததற்கே எம்பிரானை ஏன் என்ன வைத்து, அச்சோர்வினால் அவனே ஆதிபரம்பொருள் என்பதை அவ்வேழத்தின் உதவிகொண்டு தாமும் வெளியாக்குகின்றனர். இன்னவாறு ஏனையோர்க் கிணங்கி இங்கு 'மூலத்தரும் பரமே' என்றவ் யானை அழைத்தபரிசு விராதனைக்கொண்டு சொல்விக்கக் கம்பர் உளங்கொண்டாராயினும், இக்கவிக்கு வேண்டு மெனில் அக் கயமும் வேறு சொற்களால் அழைப் பதற்கு இசையுமென நினைத்தற்குமிடமுளது. ஏனெ னில், முன்னர்த் தயரதன் மதலைகளுக்குத் திருநாமஞ் சூட்டுவானமைந்த வசிட்டமுனிவன்,

கராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீந்தன னன்றே

[முதலை போர்செய்வதால் தளர்ந்து துதிக்கையுடைய யானையானது சோர்வடைந்து, 'பாம்புப் படுக்கையில் தூங்கு கின்றவனே'' என அழைக்க, அப்பொழுதே வந்து காத் தருளிய மெய்ப்பொருளுக்கே, இராமன் எனப் பெயர் கொடுத்தான்]

என்றெடுத்தோதிய புலவரும் இவரே. அவ்விடத்து இராமநாமத்தின் தத்துவத்தைத் தனக்கேயுரிய வொரு தனி வகையில் விளக்கவந்த கம்பர்கொள்கைக்கு, இன்றியமையாச் சொற்களாலேயே நம் பெருந்தகைக் குஞ்சரத்தலைவன் அழைக்க இசைந்தான். மெய்ம்மை அருள் அழகு என்னும் இவை மூன்றும் அந்தத் தில் ஒன்றே என்றும், பொறியின்வாய்ப்பட்டுப் பேரி டர் எய்தியமக்கள் இறுதியில் மெய்ம்மை என்றேனும் அருளென்றேனும் அழகென்றேனும் அவ்வொன்றின் உதவியை நாடுவாரெனின் உய்ந்தவ ராவாரென்றும், அதுதான் செயலற்று உறங்குவதுபோற் றோன்றி னும், அடைக்கல மென்றழைத்தாரை விராவிக் காத் தருளக் கறங்கினும் வேகமாக வந்தெதிர் நிற்குமென் றும் தெருட்டுதறகமைந்த கம்பர் அவ்வயின், "அரா வணையிற் றுயில்வோய்"என்று அக் கைக்கரி அழைத் தாற்போல் கேட்குமாறு தன் செவிகளுக்குக் கற் பித்துவைத்திருந்தார். இவ்விடத்திலோ அவர் வேண் டும் பொருள் முற்றிலும் வேறு. மூலப் பரம்பொரு ளே யாவுமாயின் அது, 'ஏன்' என்று புறத்தே வந்து நின்ற விந்தையை விளம்புதற்கேற்கத் தன் பண்டைய முறைப்படியே அவ்வாரணம் இங்கு அழைக்கலா யிற்று. இந்த ஐயமே இப்பாசுரத்தில் இழைந்திருக் கின்ற தென்பதை,

புறங்காண வகங்காணப் பொதுமுகத்தி னருணோக்க
மிறங்காத தாமரைக்க ணெம்பெருமா னுனியம்புதியா
லறங்காத்தற்குனக்கொருவ ராருமொருதுணையின்றிக்
கறங்காகு மெனத்திரிய நீயேயோ கடவாய்தான்

[பூதங்களுக்குப் புறத்திலேகாணவும் அகத்திலே காண வும்பொதுவாக அருட்பார்வை குறையாத தாமரைபோன்ற கண்களையுடைய எம்பெருமானே, உலகத்தைக் காப்ப தற்கு உனக்குத் துணைசெய்வார் யாருமின்றித் தனியாகக் காற்றாடிபோல் திரிய நீமாத்திரமேயோ கடன்பட்டிருக் கின்றாய்—சொல்]

எனவரும் அடுத்த பாசுரத்தால் ஊகித்து அவ்வை யத்தையும் ஒருவாறு தீர்த்துக்கொள்ளலாம். ஞான

முடையோர்க்குத் தன்னைப் பூதங்களுக்கு அகத்திலேயும், தன்னுடைய அருளிற்குப் பாத்திரமாகின்ற பக்தர்களுக்குத் தன்னைப் புறத்திலேயும் காட்டிக்கொள்ளும்படி இருவகையினரிடத்தும் ஒருபடித்தாய கருணையுடையவன் எம்பெருமானுவதை முன் அயோத்தியா காண்டத்துக் காப்புச் செய்யுளிலும்,

வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் வைப்பெங்கு
மூனு முயிரு முணர்வும்போ
லுள்ளும் புறனு முளனென்ப

எனச் செவ்விதின் காட்டியிருக்கின்றார். இவ்வண்ணம் உள்ளும் புறமுமாய் நின்று துணையேதுமின்றி அறங்காப்போன் இவனொருவனே யாவதன்றியும்,

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகி [ரோ
வினிநின்ற முதற்றேவ ரென்கொண்டென் செய்வா

[அச்சமுடைய பிறப்பாகிய பெருங்கடலைக் கடப்பதற்குப் புணையாகப் பற்றிக்கொண்டு, நன்மையையுடைய எல்லா மதத்தினர்களும் தக்கதென்று இயம்பும்படி ஒப்பற்று நின்ற பெருமைவாய்ந்த தத்துவமூர்த்தி நீ ஆயின், மதங்களுக்குத் தலைவராய் அமைந்த தேவர்கள் எதனைக்கொண்டு என்ன செய்ய இருக்கின்றனரோ]

என்று நினைக்குமளவிலே, இதனைச் சார்ந்துதொடர்ந்தே,

ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கு
நீயாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனிமூர்த்தி

[தருமத்தின் தனிமூர்த்தியே, அழிவில்லாத பிரம்மன் முதலாக உள்ள இறவாத தேவர்களுக்கும் மற்ற மன்னுயிர்களுக்கும் முதல்தந்தை நீ ஆயின், முறைப்படி அவர்களைப் பெற்றெடுத்த முதல்தாய் ஆவர் எவரோ]

என்று வினவியவாங்கு 'அப்பன்நீ' அம்மை நீ' என்னும் முடிவை எய்த, பின்னரும்,

நீயாதி பரம்பரமு நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமுநின் னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ.

[நீயே ஆதிபரம்பொருள். உலகங்கள் உன்னுடையவைகளே. இதுகாறும் ஆய்ந்தறியப்படாதிருக்கும் மதங்களும் கூட உன்னையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனவே யொழிய வேறில்லை. அப்படியிருக்க, களவு அனைய தீச் செயல்கள் செய்தவன்போல ஒளித்துக்கொள்கின்றாய். வெளிப்பட நின்றால் உனக்குத் தீங்கு உண்டாகுமோ! குறையாத இந்தப் பெரும் மாயவிளையாட்டும் உனக்கு வேண்டுமோ]

என, அன்னையும் பிதாவுமாயின் அறியப்படாமல் நிற்பதன் கருத்தைக் காணமாட்டாமல் அயர்வடைய நேர்கின்றது. தீயோரைப்போல், பயத்தாலும் பரிபவத்தாலும் எம்பெருமான், ஒருவருக்குந் தென்படாமல் ஒளிந்திருத்தல் வேண்டுமோ வென உத்தமர்தம் உள்ளம் எக்காலமும் எவ்விடத்தும் உளைகின்ற உண்மையையே ஈண்டு விராதன் எடுத்தோதினான். இதன்கண் மற்றோர் கருத்தும் மறைந்துளது. தீயாரின், என்பதை ஒப்புப்பொருளாய்க் கொள்ளாமல் நீங்கற்பொருளாய்க் கொண்டக்கால், "தீயவர்களிலிருந்து ஒளித்துக்கொள்கின்றாய். வெளி நின்றால் அவர்களுக்குத் தீங்குண்டோ" என்னும்படி அவ்வினா மாறலாகலாம். நல்லோர் இதயங்களிலும் ஞானிகள் உணர்விலும் தானே சான்றாய்த் தெரிவித்துக்கொள்கின்ற எம்பெருமான் தீயோர்க்குச் சிறிதும்தென்படலாகாதென்றிருத்தலின் காரணம்என்? தீயோர்தம் தீமையினின்றுதிருந்த அவர்கட்கன்றோ கடவுட்காட்சி பின்னரும் பன்மடங்கு அவசியமாகின்றது. "ஆதலின், அருளுடைய பெரும, தெரியநின்று நீ அவர்களையும் ஆட்கொள்ளலாகாதோ" என்று ஏங்குவார், விராதனை போல், பலர். "ஒருகால், அவ்வாறு வெளிநிற்றல் தீயோர்க்கே தீங்காய் முடியுமென்பது உன் திருவுள்ளமோ" என்னும் ஐயத்தைக் கடவுளின் கருணையில் அயிர்த்தலில்லாதார் எய்துவார். இரணியனுக்கெதிரே வெளிநின்றபோது, அதனால் அவன் நன்மை யாதும் நாடாது, "மைந்தா, என்றன் கையில் அரியைக் காட்டித் தந்தாய்" என்றே எழுந்து தன் வாழ்விற் கிறுதி தேடி வீழ்ந்தான். ஆதலின், தீயோர்முன் வெளிநின்றால் அவர்க்கே தீங்குண்டாகும் என்னுமெண்ணத்தால் எம்பெருமான் ஒளிந்திருத்தலுங் கூடும்.

ஆயினும் என்! ஒளிந்திருத்தலாற்றானே, உன் மாயை பெரிதாவதன்றிக் கருணைக்குக் குறைவுண்டென் றெண்ணமாட்டோம், எனத்துணிந்து,

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயு மறியு முலகின்றா யாகினைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்

[ஐயனே, தாயைத் தெரிந்துகொள்ளாத கன்று இல்லை. தன் கன்றைத் தாயும் அறியும்.(இது உலக இயல்) நீ இந்த உலகத்தின் தாய் ஆயின், எல்லாப் பொருள்களையும் நீ அறிகின்றாய், மற்று அவைகளோ உன்னுடைய தன்மையை அறியமாட்டா. வாராதவன்போல் எங்கும் வருகின்றவனே இது என்ன மாயையோ]

எனப் பின்னரும் வியக்கின்றான். வியந்து, காத்தற்கருமமோ மிகவுடைய எம்பெருமான், அருந்தவமொன்றும் முயலானாகி இருப்பதன்றியும், ஊக்கமும் ஆள்வினையும் அறவொழித்து உறங்குவான்போல் கிடக்கின்ற விந்தையையுஞ் சிந்தையிற்கொண்டு,

பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர்
இருவினையு முடையார்போ லருந்தவநின் றியற்றுவார்
திருவுறையு மணிமார்ப நினக்கென்னை செயற்பால
ஒருவினையு மில்லார்போ லுறங்குதியா லுறங்காதாய்

[திருமகள் தங்கிய அழகிய மார்பையுடையவனே, இணையற்ற மதத்தினர்கள் சொல்கின்ற தேவர்கள், தீவினை தீர்ந்து நல்வினைகள் எய்தற்கு உரியவர்போல், அரிய தவங்களைச் செய்கின்றார். உனக்குச் செய்யவேண்டியது என்ன இருக்கிறது. ஆதலின் ஒருபோதுந் தூங்காதவனாயினும், காரியம் ஒன்றும் இல்லாதவன்போல் தூங்குகின்றாய்]

என்று பரிகசிப்பான்போல் பரவுங்கால், "திருவுறையு மணிமார்பா" என்று அவனை அழைத்ததனின்று தொடர்ந்த நினைவுகளால் தூண்டப்பெற்று,

அரவாகிச் சுமத்தியா லயிலெயிற்றி னேந்துதியா
லொருவாயின் விழுங்குதியா லோரடியா லொளித்தி
திருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறாளோ [யால்
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்

[அழகான பூமிதேவியை நீ, ஆதிசேஷனாகத் தலையில் சுமக்கின்றாய்; வராகமாக உன் கூரிய கொம்பில் ஏந்துகின்

ருய்; பிரளயகாலத்தில் ஒரு வாயாக் விழுங்குகின்ருய்; திருவிக்கிரமனுக ஓரடியின் உள்ளே ஒளித்துவிடுகின்ருய்—இப்படி நீ நிலமகளைப் பாராட்டுவதை அறிந்தால், வாசனை பொருந்திய துளசிமாலை யணிந்த உன் அழகிய மார்பில் தங்கியிருக்கின்ற ஸ்ரீதேவி, உன்மீது கோபங்கொள்ள மாட்டாளோ]

என மாற்ருள்பூசல் மூட்டிவிடும் வாசகத்தில், பற்பல விதங்களால் எம்பெருமான் உலகிற்குதவும்சீலத்தைச் செப்பலுற்ருன்.

ஆயினும் என்! எத்துணைதான் ஏத்தினும் அப்பரம்பொருளின் மெய்ம்மைதான் யாதென இயம்பவொண்ணு ஐயமே இறுதியில் எஞ்சுகின்றது. இதற்கு என்னைகொல் செய்வேன், என்று விராதனுடைய நெஞ்சம் வெடிக்கின்றது. ஆதலின் அவன் அறவுயிர்த்து,

மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீ விதித்த மன்னுயிர்க
ளுய்யத்தா ளுகாதோ வுனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
வையத்தாற் சிறிதையந் தவிர்ந்தாரு முளரையா

[ஐயனே, நீ நியமித்த இவ்வுயிர்கள், உன் உண்மையை உணர்ந்து சிறிது உய்யலாகாதோ! அதனுல் உனக்கு ஏதேனுங் குறையுண்டோ! (உண்மைநிலை உற்றுணர இயலாவிடினும்) நீ சிவபிரானுக்கு அன்று பிரம்மகபாலம் கைகின்று நீங்க அக்ஷயம் என்று இட்ட பிச்சையால், நீயே தலைவன் என்ற மட்டிலேனும் சிறிது சந்தேகம் நீங்கினவர், இவ்வுலகத்திலும் சிலர் உளர்]

என வணக்கமுடன் உரைக்கின்ருன். இவ்வாறு கருதுமளவில், " ஆம், அனைத்தும் நீயே என்னும் மெய் நிலைத்திருக்க வேறென் உணர்தற்கிருக்கின்றது" எனத் தெளியலாமெனின்,

அன்னமா யருமறைக ளறைந்தாய்நீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா ரெல்லாரு முடிந்தாரோ
பின்னமா யொன்ருதல் பிரிந்தேயோ பிரியாதோ
என்னமா மாயமிவை யேனமாய் மண்ணிடந்தாய்

[வராகமாக உலகத்தைத் தோண்டியெடுத்தவனே, அன்னரூபமாக இருந்து முன் பிரம்மதேவனுக்கு வேதங்களை உபதேசித்தாய். அதற்குமுன் உனக்கு அவைகளைக் கற்பித்தவர் யாவர்? அவர்களெல்லாரும் ஒழிந்தனரோ! அதுநிற்க, இப்பிரபஞ்சத்திலிருந்து வேருகியும் மற்று அப்பிரபஞ்சத்தோடு ஒன்றேயாகியும் நீஇருக்கின்ற இது, அப்பிரபஞ்சத்தை விட்டுப்பிரியாமலோ அல்லது பிரிந்தே தானே! இது என்ன பெரிய மாயமோ]

என மீண்டும் மாயமே முடுகிவந்து சூழ்கின்றது. பிரபஞ்சமே தானுய் அப்பிரபஞ்சத்தினின்று தான் வேறுமாய் அமைகின்ற அதிசயத்தை ஆற்றலரிது. இவைகளை விசாரிக்கப்புகுவார், பாரஸீகக் கவி உமார் கையாம் என்றவர் ஏங்கியபடி, சென்றவழியே திரும்புவதல்லால் சேர்ந்து தீருமிடம் எட்டியநாள் யாண்டுமில்லை.

எனினும் என்! எம்பெருமானை எய்தி உய்வதற்கு இத்தகைய ஐயங்கள் இடையூரு யிருக்கவேண்டா. முன் மிதிலையில் மணக்கோலமுடன் இப்பெருமகன் உலாவந்தநாள், ஒரு தெரிவை, "கையும் மெய்யும் கண்டிலள்" ஆயினும், "கண்டவர் உய்யும் உய்யும்" என்ற உறுதியை உன்னினுள். அந்த நிச்சயத்தை விராதன் இங்குத் தன் கதியால் நிரூபித்து நிற்கின்ருன். ஏனெனில் மெய்யைத்தான் சிறிது முணர்ந்திலனுயினும்,

ஒப்பிறையும் பெறலரிய வொருவாமுன் னுவந்துறையு
மப்புறையு டுறந்தடியே னருந்தவத்தா லணுகுறலா
லிப்பிறவிக் கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையுந்
துப்புறமு நீர்த்தசுடர்த் திருவடியாற் றுடைத்தாய்நீ

[ஒப்புச் சிறிதுமில்லாத ஒருதனி முதல்வனே, முன் நீ விரும்பித்தங்கும் திருப்பாற்கடலை விட்டு, அடியேனது அரிய தவத்தினுல் இங்கு வந்ததால், இந்தப் பிறப்பென்னுங் கடலைக் கடந்தேன், இனிப் பிறக்கமாட்டேன். என் இருவினைகளும், பவளம்போன்ற ஒளியுடைய உன் திருவடிகளால் தீர்த்தருளினுய்]

என விளம்பி, முதலிற்போன்றே முடிவிலும் இராமபிரானது திருவடிகளைத்தொழுது தன் தோத்திரத்தை முடித்தனன்.

அடியார்குலம் வாழவருமெம் மழைவண்ணத் தண்ணல்தன் கால்வண்ண மிங்குக்கண்டோம்; கொடியோர் குலம் அழிந்தொழிய வோங்குமவன் கைவண்ணம் இனிக் காண்போம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க "சுத்தவைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறாதீர்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

லிமிடெட் ஸோல் ஏஜண்டு: குன்ஸர்ன், மதுரை

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஸுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி

பிரான்சு:
மதுரை.
காஞ்சீபுரம்

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[4-வது வால்யூம், 958-வது பக்கத் தொடர்ச்சி]

தூதுவிடு சருக்கம்.

450

மாலைதாழ மாடவாய் நிலத்தகத்து மங்கைமார்
வேலவாய நெடியகண் விலங்கிநின் றிலங்கலாற்
சாலவாயி றெலாமொர் தாமரைத் தடத்திடை
நீலமா மலர்க்குழா நிரந்தலர்ந்த நீரவே　　50.

மாலை - பூமாலைகள், தாழும் - தொங்குகின்ற, மாட வாய் நிலத்து - மாடங்களின் வாயிலில், அகத்து - அவ்வவ் வீடுகளில் வசிக்கும், மங்கைமார்-மாதர்களது, வேல வாய நெடியகண்-வேலின் நுனியைப்போன்றகூர்மையான பெரியகண்கள், விலங்கி நின்று இலங்கலால்-ஒளியுடன் கூடி விளங்குவதால்; சாலம் வாயில் தாம் எலாம் - சாளரங்களையுடைய வாயில்களெல்லாம், ஓர் தாமரை தடத்து இடை - ஒரு தாமரைக் குளத்தினிடையே, நீலம் மா மலர் குழாம் - சிறந்த நீலோற்பல மலர்களின் கூட்டம், நிரந்து அலர்ந்த நீரவே - வரிசையாக மலர்ந்திருக்கின்ற தன்மையன ஆயின.

மாளிகை - தடாகத்திற்கும், மாதர்முகம் தாமரைக்கும், அவர் கண்கள் நீல மலர்களுக்கும், ஒப்பாயின.

451

சுண்ணமாரி தூவுவார்
　　தொடர்ந்துசேர்ந்து தோழிமார்
வண்ணவார வளைதயங்கு
　　முன்கைமேல் வணங்குவார்
நண்ணிநாணொ ழிந்துசென்று
　　நம்பிமார்கண் முன்னரே
கண்ணிதம்மி னென்றிரந்து
　　கொண்டுநின்று கண்ணுவார்.　　51.

(மாதர்கள்), சுண்ணம் மாரி தூவுவார் - வாசனைப் பொடிகளை மழைபோல் சொரிவார், தொடர்ந்து சேர்ந்து - தொடர்ந்து அடைந்து, தோழிமார் - தம் தோழிமார்களது, வண்ணம் வளைதயங்கு வாரம் முன் கை மேல் வணங்குவார் - அழகிய வளைகள் தங்கிய அன்புடைய முன்னங் கைகளின்மேல் சாய்வார். நாண் ஒழிந்து - வெட்கத்தை விட்டு, நம்பிமார்கள் முன்னர் நண்ணி சென்று - அரச குமாரர்களுக்கு எதிரே நெருங்கிச் சென்று, "கண்ணி தம்மின் என்று - பூமாலை கொடுங்கள்" என்று, இரந்து கொண்டு நின்று - யாசித்தவர்களாய் நின்றுகொண்டு, கண்ணுவார் - கருதுவார்.

452

பாடுவார் முரன்றபண் மறந்தொர்வாறு பாடியும்
ஆடுவான் மறந்தணி மயங்கியாமை யாடியும்
சூடுவான் றொடுத்தகோதை சூழ்குழன் மறந்துகண்
ணுடிவாய் நிழற்கணிந்து நாணுவாரு மாயினர்.　　52.

பாடுவார் - பாடுகின்றவர், முரன்ற - இசைத்த, பண் மறந்து - பண்களை மறந்து, ஓர் வாறு - ஒரு வாறு, பாடியும் - பாடியும்; ஆடுவான் மறந்து - ஆடுவதை மறந்து, அணி மயங்கி - கிரமம் பிறழ்ந்து, ஆமை ஆடியும் - ஆமையைப் போல் ஆடியும்; சூடுவான் தொடுத்த கோதை - சூடுவதற்குத் தொடுத்த பூமாலைகளை, சூழ்குழல் மறந்து - அடர்ந்த தம் கூந்தலில் அணிவதை மறந்து, கண்ணுடி வாய் நிழற்கு - கண்ணுடியில் தோன்றிய தமது பிரதிபிம்பத்துக்கு, அணிந்து - சூட்டி, நாணுவாரும் ஆயினர் - நாணம் அடைகின்றவர்களும் ஆயினர்.

ஆமையாடினர், ஆமை ஆடினல் எவ்வாறிருக்குமோ அவ்வாறு அடைவின்றி ஆடினர்.

453

இட்டவில் லிரட்டையு மிரண்டுகெண்டைபோல்பவும்
விட்டிலங்கு தொண்டையங் கனிப்பிழம்பொ டுள்விராய்ச்
சுட்டிசூட் டணிந்துசூளி மைமணிசு டர்ந்துநீள்
பட்டம்வேய்ந்த வட்டமல்ல தில்லைநல்ல பாங்கெலாம் 53

நல்ல பாங்கு எலாம் - அழகிய அவ்விடங்களில் எல்லாம், இட்டவில் இரட்டையும் - இரட்டையாக அமைத்த (புருவங்களாகிய) விற்களும், இரண்டு கெண்டை போல்பவும் - (கண்களாகிய) இரண்டு கெண்டை மீன்களைப்போல்பனவும், விட்டு இலங்கு தொண்டை அம் கனி பிழம்பொடு - விட்டுவிட்டுப் பிரகாசிக்கின்ற கொவ்வைக்கனியாகிய உதடுகளோடு, உள் விராய் - கலந்து, சூட்டு சுட்டி அணிந்து - கொண்டையில் சுட்டி என்னும் ஆபரணத்தை அணிந்து, சூள் இமை மணி - சூழ்ந்து பிரகாசிக்கின்ற இரத்தினங்கள், சுடர்ந்து - ஒளி வீசி, நீள் பட்டம் - நீண்ட நெற்றிப்பட்டங்களை, வேய்ந்த - அணிந்த, வட்டம் அல்லது இல்லை - (மாதர்களின்) முகவட்டங்கள் அல்லது வேறு இல்லை.

454

அலத்தகக்கு ழம்புதம் மடித்தலத்தொர் பாகமா
நிலத்தலத்தொர் பாகமாக நீடுவாயில் கூடுவார் [லான்
கலத்தலைத்தொ குத்தகோவை கண்ணெகிழ்ந்து சிந்த
மலைத்தலைத்த ழற்சிதர்ந்த போன்றமாட வாயெலாம்.

அலத்தகம் குழம்பு - செம்பஞ்சிக் குழம்பு, தம் அடி தலத்து ஓர் பாகம் ஆக-தம்பாதங்களில் ஒரு பாகமாகவும், நிலம் தலத்து ஓர் பாகம் ஆக - தரையில் ஒரு பாகம் ஆகவும் (சிந்தும்படி விரைவுடன் பூசிக்கொண்டு) நீடு வாயில் கூடுவார் - நீண்ட வாயில்களை அடைகின்ற மாதர்களது, கலம் தலை தொகுத்த கோவைகள் - ஆபரணங்கள் தொடுத்திருக்கின்ற கோவை மாலைகள், நெகிழ்ந்து சிந்தலால் - அறுந்து சிந்துவதால், மாடம் வாய் எலாம் - மாளிகைகளின் வாயில்கள் எல்லாம், மலைத்தலை - மலையில், தழல் சிதர்ந்த போன்ற-நெருப்புச் சிந்தியிருப்பதுபோல் விளங்கின.

455

பாடகந்து ளங்கவும் பசும்பொனோலை மின்னவும்
சூடகந்து ளும்பவுஞ் சுரும்புசூழ்ந்து பாடவும்
ஊடகங்க சிந்தொசிந்து நின்றுசென் றுவந்துலாய்
நாடகங்க ணன்னகர்க்க ணங்கைமார் நவிற்றினர். 55-

பாடகங்கள் துளங்கவும் - பாதங்களி லணியும் பாடகம் என்னும் ஆபரணம் அசையவும், பசும் பொன் ஓலை மின்னவும் - காதிலணியும் பசும் பொன் ஓலைகள் பிரகாசிக்கவும், சூடகம் துளும்பவும் - கை வளைகள் குலுங்கவும், சுரும்பு சூழ்ந்து பாடவும் - வண்டுகள் சூழ்ந்து பாடவும், ஊடு அகம் கசிந்து, மனம் உள்ளெல்லாம் இளகி, ஒசிந்து - தளர்ந்து. நின்று சென்று வந்து உலாய் - நின்றும் போயும் மீண்டும் உலவியும், நங்கைமார் - மாதர்கள், நல் நகர்க்கண் - நல்ல நகரத்தில், நாடகங்கள் நவிற்றினர் - நாடகங்கள் நிகழ்த்தினர்.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முபலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஷாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**

காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

மிருகங்களின் கர்ப்பம்:—பூனே 50 நாள், நாய் 60 நாள், பன்றி 115 நாள், ஆடு 150 நாள், பசு 285 நாள், எருமை 310 நாள், குதிரை 345, கழுதை 380 நாள், யானே 615 நாள்.

***

ஹைதராபாத் நைஸாம் மன்னரிடத்தில் 100,000, 000 லட்சம் மதிப்புள்ள தங்கமும், 200,000,000 பெறுமானமுள்ள நகைகளும் இருக்கின்றனவென்று ஒருபிரிட்டிஷ் பத்திரிகை கூறுகின்றது.

***

காலண்டர் வரவு:—லயன் சோப் கம்பனியின் இந்திய ஏஜண்டான அடைக்கப்பசெட்டி கம்பனியார் 1932-வது வருடக் காலண்டர் ஒன்றை அனுப்பிவித்தார்கள். காலண்டர் பார்ப்பதற்கு அழகாகவிருக்கின்றது.

***

இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரி கார்யாலயத்தின் மண்டப சிகரத்தில் இந்தியமுறையில் சித்ரவேலே செய்வதற்காக நான்கு இந்தியச்சிற்பிகள் அழைத்துச் செல்லப்பட்டாராம். ஒரு அடிக்கு ஒரு பவுன் வீதம் அவர்களுக்குக் கூலி கொடுக்கப்பட்டதாம்.

***

யுத்தக்கடன் விஷயமாக ஜெர்மனியார் பிரஞ்சு அரசாங்கத்திற்கு வருஷம் ஒன்றிற்கு 205000 லட்சம் தங்க மார்க்குகளே யுத்தம் நின்றதிலிருந்து 37 வருஷத்திற்குக் கொடுக்கவேண்டுமென்றும், அதற்குப் பிறகு 20 வருஷங்களுக்கு 153000 மார்க்குகளேக் கொடுக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜெர்மன் குடியரசு அரசாங்க பொக்கிஷ மந்திரி இனிமேல் அப்படிக்கொடுத்து வருவதற்கு ஜெர்மனியால் இயலாதென்றும், அப்படிக் கொடுக்கும்படி ஜெர்மனியை வற்புறுத்துவது உலக நன்மைக்கான காரியமாகாதென்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்ருர் என்று ஒரு அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வெங்கடபதி தேவ மஹாராஜன்:—1585-ம் ஆண்டு முதல் 1614-ம் ஆண்டுவரை விஜயநகர ராஜ்யத்தை, பென்னுகொண்டா என்னும் நகரைத் தலேநகராகக் கொண்டு அரசாண்ட வெங்கடபதி தேவமஹாராஜனது சரித்திரத்தைக்கொண்ட இந்நூல் வரப்பெற்ருேம். இந்நூல் முதன் முதல் ஸ்ரீமான் T. சிவசங்கரன் என்பவரால் தெலுங்கில் எழுதப்பெற்றது. அமராபுரத்தில் வயித்தியத்தொழில் செய்துவரும் டாக்டர் V. A. சுப்பிரமணியபிள்ளே என்பார் அம்முதனூலேத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். வெங்கடபதிராஜ மஹாராஜனது பிறப்பும் வளர்ப்பும், அவரது பேராற்றலும், ஆட்சியின் மாட்சியும் இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுளது. தமிழரும் அம்மன்னரின் ஜீவிய சரிதையைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் நோக்கத்தோடு இது மொழிபெயர்க்கப்பட்டுளது என முகவுரையில் கூறப்பட்டுளது. 80 பக்கங்களேக் கொண்ட இப்புத்தகம் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டுளது. விலே அணு 12. வேண்டுவோர் டாக்டர் V. A. சுப்பிரமணியம்பிள்ளே, அமாரபுரம் அனந்தபூர் ஜில்லா என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

***

கலேமகள்:—தாம் கற்றறிந்தவைகளேப் பிறரும் தெரிந்துகொள்ளும்படி செய்வதே கற்றவர்களின் கடனுதலால், அக்கடமையை நிறைவேற்றிவைக்கும் நோக்கத்துடன் மைலாப்பூர் லாஜர்னல் அச்சுக்கூடத்தில் அச்சியற்றி ஸ்ரீமான் R. நாராயணசாமி ஐயரால் பிரசுரிக்கப்படும் கலேமகள் என்னும் மாதப் பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்ருேம். இக்கலேமகளின் நிர்வாக ஆசிரியர் T. S. ராமசந்திர ஐயர். ஸ்ரீமான்களான P N அப்புஸாமி ஐயர், S. அனவிரதநாயகம் பிள்ளே, M. இராகவ ஐயங்கார், K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயர், T. K. சிதம்பரநாத முதலியார், T. சிவராம சேதுப்பிள்ளே, K. A. நீலகண்ட சாஸ்திரி, S. வையாபுரிபிள்ளே, ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் முதலியவர் கௌரவ ஆசிரியர்களாயிருந்து பத்திரிகை சிறந்த முறையில் நடப்பதற்குத் துணேசெய்வார்கள் என்று தெரிகின்றது.

முதல் இதழில் மகாமகோபாத்யாயா சுவாமிநாத ஐயர் கலேகள் என்னும் விடயத்தைப்பற்றி எழுதியுள்ளார். மஹாபலிபுரமும் பகீரதன் தவமும் என்னும் விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சி யொன்றை ஸ்ரீமான் K. A. நீலகண்ட சாஸ்திரி எழுதியுள்ளார். சிறுவர்களும் எளிதில் படித்து அறிந்துகொள்ளும் வண்ணம், தாவரங்களேப்பற்றிய வியாஸமும், பாம்பைப் பற்றியும், தோல்வகைகளேப்பற்றியும் சில வியாசங்கள், ஸ்ரீமான்களான M. S. சபேஸ் ஐயர், விச்வநாத ஐயர், அப்புஸாமி ஐயர் முதலியவர்கள் எழுதியுள்ளார்கள். தமிழ் வேந்தரின் படையெடுப்பு என்ற கட்டுரை ஒன்று M. இராகவையங்காரால் எழுதப்பட்டுளது. அச்சுயந்திர வளர்ச்சிபற்றியும் அச்சுவசதி கல்வி அபிவிர்த்திக்கு உதவவல்லது என்பது பற்றியும் ஸ்ரீமான் S. வையாபுரிபிள்ளே ஒரு கட்டுரை எழுதியுள்ளார். நாமும் வள்ளுவரும் என்ற ஒரு கட்டுரை ஸ்ரீமான் T. K. சிதம்பரநாத முதலியாரால் எழுதப்பட்டுளது. மாதர்கள் பகுதியொன்றும் இதில் உளது. அப்பகுதிகளில் மாதர்களே விஷயம் எழுதியுள்ளார். இம் முதல் இதழில் ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் என்பவர் மீன்களேப்பற்றி எழுதியுள்ளார்.

இப்பத்திரிகையின் வருட சந்தா ரூ. 4 நல்ல காகிதத்தில் செவ்விய அச்சுடனும் சித்திரப்படங்களுடனும் இது வெளிவந்துளது.

வெளிவந்து விட்டது! சென்ற நான்கு வருடகாலமாய் எதிர்பார்க்கப்பட்ட புதுமையான நாவல்!! வெளிவந்து விட்டது!!!

தென் இந்திய நாவல் உலகத்து முடிசூடாச் சக்கரவர்த்தியாகிய நிகரற்ற நாவலாசிரியர்

வடுவூர், கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய

துரைக்கண்ணம்மாள் அல்லது **திரிசங்கு சாஸ்திரியார்.**

என்னும் புதுமையான நாவல் வெளிவந்துவிட்டது. இவ்வொப்புயர்வற்ற நாவலே வெறும் வார்த்தைகளால் புகழ்ந்து எழுத முடியாதென்பது நிச்சயம். பிரமிக்கும்படியான அநேக சித்திரப்படங்கள் அடங்கியது—450 பக்கங்கள் கொண்டது. (தபால் செலவு அணு 7) விலே ரூபா 2 4 0.

V. S. T. சாமி அண்டு கம்பெனி, வேப்பேரி, மதராஸ்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

—: வைத்திய ரத்ன :—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனும்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விசவநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், விசேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

விலை உள்நாடு		விலை வெளிநாடு
,, 9-0-0	அரைலெதர் பயிண்டு	,, 10-8-0
,, 8-8-0	காலிகோ	,, 10-0-0
,, 7-8-0	(பயிண்டு செய்யாதது)	9-0-0

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணு ஆகும் தபாலில் அனுப்பவேண்டுமானல் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்

கலாநிலயம்,
புரசை, சென்னை.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.

பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷணை குடும்பச் சேமிப்பு இவற்றிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.

குறைந்த விகிதப் பிரிமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி

மொத்த ஐவேஜி ... ரூ. 1,72,00,060-க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,,86,00,00

திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது

ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.

T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

டி. அனந்தாச்சாரி, பி. ஏ., பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

விதவான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தணடையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

அலங்காரம்—அழகு—ஸ்நானம்

இவைகளுக்கு எங்கள்

:: மணித் தைலம் ::

மிகச் சிறந்தது. ஆயுர்வேத முறைப்படி தயார்செய்யப்பட்டது. 50 வருஷங்களாகப் புகழுடன் உலாவிவருகிறது. தலைமயிரை உதிராமற் தடுத்து நீளமாக வளரச் செய்யும். முகத்திலுண்டாகும் வடுக்களையும் பருக்களையும் நீக்கும். உஷ்ணத்தைச் சமனஞ்செய்யும்.

5 துலாம் தைலம் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1

5 புட்டிகள் விலை ரூ. 4

ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)